# ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி

**பங்கஜம் நகர்: போடிநாயக்கனூர்**

# நாற்பத்தி ஐந்தாம் ஆண்டறிக்கை

ஏலம் மணக்கும் மேற்கு தொடர்ச்சி மலைகளின் பாதம் தொட்டு ஏலம் மணக்கும் போடி மாநகரத்தில் அமைந்திருக்கும் எமது ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி **இன்று (30.03.2019) நாற்பத்தி ஐந்தாம்** ஆண்டு விழாவினை உங்களது நல்லாசியுடனும் இறைவனுடைய அருளாசியுடனும் மிகச் சிறப்பாக கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

ஏல விவசாயிகள் சங்கத்தின் தலைவரும் உண்மை, உழைப்பு, உயர்வு என்று சிகரம் தொட்ட எங்கள் கல்லூரியின் தலைவரும் இவ்வினிய விழாவிற்கு தலைமை ஏற்றிருக்கும் **உயர்திரு.S.V.சுப்பிரமணியன்** அவர்களே! கல்லூரியின் வளர்ச்சிக்கு உற்ற தோழனாக இருக்கும் உபதலைவர் **உயர்திரு.P.V.கருப்பையா** அவர்களே! எண்ணியதை எண்ணியது போன்று செயல்படும் கல்லூரியின் செயலர் **உயர்திரு.S.இராமநாதன், M.A.,** அவர்களே!

இமயம் போல் வளரும் நம்கல்லூரிக்குத் தூண்களாக விளங்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்களே! மரியாதைக்குரிய பொதுக்குழு உறுப்பினர்களே, மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஏல விவசாயிகள் சங்க நிர்வாகிகளே!

இன்றைய சிறப்பு விருந்தினர்,

**Madurai Kamaraj University, Controllor of Examination**

**முனைவர். O.Ravi, M.Sc., M.Phil., Ph.D., அவர்களே!**

பெற்றோர்களே! விருந்தினர்களே! பேராசிரியப் பெருமக்களே! அலுவலக நண்பர்களே! நமது கல்லூரியின் அருமை செல்வங்களாம் முன்னாள் இந்நாள் மாணவ, மாணவிகளே! நமது கல்லூரியின் **நாற்பத்தி ஐந்தாம் ஆண்டு** விழாவைச் சிறப்பிக்க வருகை புரிந்திருக்கும் உங்கள் அனைவரையும் இருகரம் கூப்பி வரவேற்று **2018–2019** கல்வியாண்டிற்குரிய ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கும் இத்தருணத்தில் முதற்கண் நமது கல்லூரியில் நடந்த முக்கிய நிகழ்வுகள் மற்றும் சாதனைகளைப் பட்டியலிடுகிறேன்.

**<u>கல்லூரியில் நடந்த முக்கிய நிகழ்வுகள் மற்றும் சாதனைகள்:</u>**

**1. கல்லூரி வளர்ச்சி பணிகள் :**

நமது கல்லூரி அலுவலகத்திற்கு 2018 -2019 ஆம் கல்வியாண்டில் புதுப்பிக்கப்பட்ட குளிர்சாதன வசதி , Net work, தனித்தனி cabin வசதி, Wifi, Tally போன்ற வசதிகள் செய்யப்பட்டு உள்ளது.

நமது கல்லூரியில் பயின்று வரும் அனைத்து மாணவ, மாணவியர்களின் குடிநீர் தேவையை போக்க அனைத்து துறைகளிலும், பொது இடங்களிலும் சுமார் 21 RO water பொருத்தப்பட்டுள்ளது.

கல்லூரியின் பாதுகாப்பை மேலும் சிறப்பாக கவனிக்க கல்லூரி வளாகங்கள் சுற்றிலும் 48 CCTV பொருத்தப்பட்டுள்ளது.

IQAC, மற்றும் சுயநிதிப்பிரிவு அலுவலகம் புதிதாக கட்டப்பட்டு அனைத்து உபகாரணங்களும் வழங்கப்பட்டு இந்தாண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கல்லூரி வளாகத்தில் பசுமை சூழலை மேலும் சிறப்பிக்கும் வகையில் Mist & Trip வசதிகள் செய்யப்பட்டு புதிதாக பூந்தோட்டங்கள் கண்ணை கவரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் பயிலும் மாணவியர்கள் பயன்பெறும் வகையில் விளையாட்டு அரங்கம் அருகில் 9 கழிப்பறைகள் புதிதாக கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த கல்வியாண்டு முதல் **UGC Sponsored Community College Courses in Diploma course in Food Processing, Industrial Chemistry** என்கிற பட்டய படிப்புகள் தொடங்கப்பட்டு உள்ளது. இதில் 100 மாணவ, மாணவியர்கள் பயின்று வருகிறார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு UGC மானியக்குழுவிலிருந்து சுமார் 2.65 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இக்கல்வியாண்டில் கல்லூரி Infrastructure வளர்ச்சிக்கு **RUSA Grant 2.00** கோடி பெறப்பட்டுள்ளது.

உள்தர மதிப்பீட்டு மையத்தின் (IQAC) விடா முயற்சியால், வருடத்திற்கு 1.8 கோடி மதிப்புடைய, இந்த **G Suite domain** ஆனது கல்லூரிக்கு

முற்றிலும் இலவசமாக பயன்படுத்திக்கொள்ள 20.09.2018 அன்று Google USA ஆல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. Google ஆல் வழங்கப்பட்ட இந்த G Suite ஆனது மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பெரிதும் உபயோகமான 61 முக்கிய

பயன்பாடுகளும், வரம்பற்ற சேமிப்பு (Unlimited Cloud Storage Space) உள்ளடக்கியது என்பதை உள்தர மதிப்பீட்டு மையம் பெருமிதமாக தெரிவித்துக் கொள்கிறது.

**2Research Guidance and Research Publication :**

**கணிதத் துறை:**

Dr. C. இளங்கோ, வழிகாட்டுதலின்படி

Ph.D பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை – 2

Ph.D பட்டம் பெற சமர்ப்பித்தவர்களின் எண்ணிக்கை – 1

**Dr. K. கிருஷ்ணன், வழிகாட்டுதலின்படி**

Ph.D பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை – 4

Ph.D பட்டம் பெற சமர்ப்பித்தவர்களின் எண்ணிக்கை – 1

**வணிகவியல்துறை:**

**Dr. S.பாலமுருகன், வழிகாட்டுதலின்படி**

Ph.D பட்டம் பெற பயிலுபவர்களின் எண்ணிக்கை – 2

**Dr. A.சுஜாதா, வழிகாட்டுதலின்படி**

Ph.D பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை – 1

Ph.D பட்டம் பெற பயிலுபவர்களின் எண்ணிக்கை – 3

**கணினித்துறை:**

**Dr. S.சிவக்குமார் வழிகாட்டுதலின்படி**

Ph.D பட்டம் பெற பயிலுபவர்களின் எண்ணிக்கை – 5

**Dr. R.முருகேசன் வழிகாட்டுதலின்படி**

Ph.D பட்டம் பெற பயிலுபவர்களின் எண்ணிக்கை – 4

**வேதியியல்துறை:**

**Dr. G.இரவீந்திரன் வழிகாட்டுதலின்படி**

Ph.D பட்டம் பெற பயிலுபவர்களின் எண்ணிக்கை – 4

2010-ம் கல்வியாண்டு முதல் பேராசிரியர்களின், ஆராய்ச்சி வழி காட்டுதலுக்கும் மற்றும் ஆராய்ச்சி கட்டுரைகள் பிரசுரித்தமைக்கும் நமது கல்லூரி நிர்வாகம் தலா ரூபாய் 1000/- ரொக்கப் பரிசு அளித்து கௌரவிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

3. **வேலைவாய்ப்பு வழிகாட்டி மற்றும் ஆலோசனை மையம்**

**(Career & Counseling Cell)**

நமது கல்லூரியில் Career Guidance Cell, கணிதப் **பேராசிரியர் Dr.செ.இளங்கோ** அவர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இந்த கல்வியாண்டில் (2018-2019) 300 மாணவ, மாணவியர்கள் இதில் உள்ளனர்.

நமது கல்லூரியில் 30.06.2018 அன்று **TVS Training & Services** நிறுவனத்தினரால் **ICICI** தனியார் வங்கிக்கென நடத்தப்பட்ட வளாகத்தேர்வில் 10 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அக்டோபர் 27, 2018 அன்று **TVS Training & Services** நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட வளாகத்தேர்வில் நமது கல்லூரியில் சார்பாக 13 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் **CPACIAS Academy** மற்றும் **CGPC** ஆகிய இரண்டு பிரிவிலும் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதில் பேராசிரியர்கள் உழைத்தனர். குறிப்பிடும்படியாக பேரா.V.அருண்குமார், பேரா.U.நந்தினி, பேரா.B.கவிதா, பேரா.M.கனகராஜ் மற்றும் பேரா.K.மதன்குமார் ஆகியோர் சிறப்பாக செயல்பட்டு மாணவர்களின் நலனில் அக்கறை செலுத்தினர்.

பிப்ரவரி 3, 2019 பாரத் நிகேதன் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற வளாகத் தேர்வில் நமது கல்லூரியைச் சேர்ந்த 4 மாணவர்கள் வருடத்திற்கு சுமார் 4 லட்சம என ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு தேர்வாகியுள்ளது குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி 20, 2019 அன்று நமது கல்லூரியில் **CPAC IAS** அகாடமி தொடங்கப்பட்டது. இதனை நமது தேனி மாவட்ட உதவி ஆட்சியர் உயர்திரு.C.தினேஷ்குமார் அவர்கள் துவக்கி வைத்தார். மாணவர்களிடையே அரசு தேர்விற்கு தயாராவது எப்படி, அதனை எப்படி அணுகுவது என்பதைப் பற்றி மிக விளக்கமாக உரையாற்றினார். அதன் பின்பு **CPAC IAS** சார்பாக மாணவர்களுக்கு தகுதி தேர்வு 27, பிப்ரவரி 2019 அன்று நடத்தப்பட்டது. இத்தேர்வில் சுமார் 445 மாணவர்கள் கலந்து கொண்டனர். தகுதித்தேர்வின் மூலம் சுமார் 294 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

மார்ச் 21 மற்றும் 25, 2019 அன்று அமெரிக்காவைத் தலைமையிடமாகக் கொண்ட **“Xcuete Smart Technologies”** என்னும் நிறுவனம் நமது கல்லூரியில்

நடத்திய வளாகத் தேர்வில் நமது கல்லூரியைச் சேர்ந்த 30 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

மார்ச் 26, 2019இல் **ICICI** தனியார் வங்கியின் சார்பாக நமது கல்லூரியில் வைத்து நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு வளாகத் தேர்வில் சுமார் 40 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு கல்லூரிக்கு பெருமை சேர்த்தனர்.

**4. *Bridge Intensive course***

நம் கல்லூரியில் ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலும், முதலாமாண்டு மாணவர்கள் தங்களது பாடங்களை எளிமையாகவும், தெளிவாகவும் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் Dr.S.சிவக்குமார், அவர்கள் தலைமையில் ***Bridge Intensive course*** என்ற மூன்று நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மாணவர்கள் பன்முகத்திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான ஒரு திறவுகோலாக இப்பயிற்சி உதவுகிறது.

இப்பயிற்சியில் கீழ்க்கண்ட பாடப் பகுதிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

1. ***English Communication,***
2. ***Mathematics***
3. ***Computer Fundamentals***
4. ***Introduction to Basic Sciences***
5. ***Introduction to Arts and Humanities***
6. ***Current Affairs and Career Aspects***

இக்கல்வியாண்டிலும் இளங்கலை பயிலும் **703** முதலாமாண்டு மாணவர்கள் **27/06/2018 முதல் 29/06/2018** வரை நடைபெற்ற Bridge intensive Course-ல் பங்கு பெற்றனர். வெவ்வேறு துறையைச் சார்ந்த 96 ஆசிரியர்கள் தத்தம் பாடங்களில் சிறப்புரை நிகழ்த்தினர்.

இப்பயிற்சியின் முடிவில் மாணவர்களுக்கு மதிப்பீட்டுத் தேர்வுகள் நடத்தப்பட்டு அவர்களின் முன்னேற்றம் கண்டறியப்படுகிறது. இப்பயிற்சியானது, பள்ளிகளிலிருந்து கல்லூரிக்கு மற்றும் புதுசூழலில் இணைந்து கொள்ள மாணவர்களுக்கு பெரும் உதவியாக அமைகிறது. இப்பயிற்சி குறித்து

மாணவர்களிடம் பெறப்படும் கருத்துக்கள், பயிற்சியில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு உதவும் வகையில் அமைகிறது.

**5. உள்தர மதிப்பீட்டு நிர்ணய மையம்**

**(Internal Quality Assurance Cell-IQAC)**

உள்தர மதிப்பீட்டு மையம் நமது கல்லூரி முதல்வரைத் தலைவராகக் கொண்டு 2007-இல் தோற்றுவிக்கப்பட்டது. IQAC ன் Co-**ordinator ஆக Dr.S.சிவக்குமார்** அவர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். இம்மையம் கல்லூரியின் ஒவ்வொரு துறையும் எங்கணம் செயல்படுகிறது என்பதை அறிந்து கொள்ளும் நோக்கோடு தேசிய தர மதிப்பீட்டுக் குழு (NAAC) பரிந்துரையின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது. இம்மையத்தின் பிரதான பணியானது கல்லூரியின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு தேவையான உணர்வுள்ள நிலையான மற்றும் வினைத்திறனுள்ள அமைப்பை உருவாக்குவதாகும்.

இக்கல்வியாண்டின் தொடக்கத்தில் உள்தர மதிப்பீட்டு மையம் மூலமாக கல்லூரி வளர்ச்சி குழு (College Development Committee) உருவாக்கப்பட்டது. இக்குழுவானது ஆட்சிக்குழுவுக்கும், கல்லூரியின் துறைகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை குறைக்கும் பாலமாக இயங்கி வருகிறது.

இக்கல்வியாண்டில் முதலாமாண்டு மாணவர்களுக்காக **25.06.2018 அன்று Freshers' day - 2018 (Motivation and Orientation Programme)** நடத்தப்பட்டது.

இந்த கல்வியாண்டில் உள்தர மதிப்பிட்டு மையம் வாயிலாக நம் பாரத பிரதமரின் தூய்மை இந்தியா திட்டமான Swachh Bharat Summer Internship (SBSI) நம் கல்லூரியின் சார்பாக 40க்கும் மேற்பட்ட NSS, NCC மாணவர்கள் https://sbsi.mygov.in போர்டலில் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மேலும் SBSI க்கான 100 மணி நேர, தூய்மைக்கான வேலைகளில் NSS, NCC மாணவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் இந்த கல்வியாண்டில் உள்தர மதிப்பிட்டு மையம் வாயிலாக **Rashtriya Uchchatar Shiksha Abhiyan (RUSA)** உள்கட்டமைப்பு மேம்பாட்டு பிரிவில் (2 கோடி மதிப்புடையது) ஜீன் மாதம் நம் கல்லூரியின் திட்ட அறிக்கை RUSA Office, Tamilnadu. (MHRD), DOTE Campus, Chennai க்கு

அனுப்பப்பட்டது. இதை போலவே KAUSHAL, B.Voc. Programme க்கான திட்ட அறிக்கை 19.07.2018 அன்று The Section Officer (NSQF), UGC, New Delhi க்கு அனுப்பப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, **RUSA மூலமாக ரூ. 1.20 கோடி நிதி வழங்கவும், Community College Course க்கு ரூ. 2.65 கோடி நிதி வழங்கவும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.**

**உள்தர மதிப்பிட்டு மையம் மூலமாக Unnat Bharat Abhiyan(UBA)ல் நம் கல்லூரி பதிவு செய்யப்பட்டதில் நம் கல்லூரி தேர்ந்தெடுக்கப்பட்டது. UBA ன் Co-ordinator ஆக Dr.C.கோபி அவர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்.**

இக்கல்வியாண்டில் அறிவியல் பயிலும் மாணவர்களின் அறிவு மேலும் மேம்பட, உள்தர மதிப்பீட்டு மையம் சார்பில் 01.08.2018 அன்று "Language of Physics - Mathematics" என்னும் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்த, உள்தர மதிப்பீட்டு மையம் சார்பில் 18.08.2018 அன்று "Professional Ethics" என்னும் ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி (FDP) ஏற்பாடு செய்யப்பட்டது. முனைவர் P. பொன்ராஜ், Former Principal, M.D.T. Hindu College, Tirunelveli. சிறப்புரையாற்றினார்.

மேலும் ஆசிரியர்களின் ஆராய்ச்சி திறனை மேம்படுத்த, உள்தர மதிப்பீட்டு மையம் சார்பில் 31.10.2018 அன்று **"Research Applications in Cloud Computing : Modelling and Simulation using CloudSim"** என்னும் ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி (FDP) ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் திரு.K.கனகராஜ், Assistant Professor (Sr.Grade)/MCA, Mepco Schlenk Engineering College, Sivakasi சிறப்புரையாற்றினார்.

**கல்லூரியின் தரத்தை ஒரு படி மேலே கொண்டு செல்ல இக்கல்வியாண்டில் National Institutional Ranking Framework (NIRF) அறிக்கையை 24.11.2018 அன்று அரசு போர்டலில் பதிவேற்றம் செய்யப்பட்டது.**

மேலும் ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்த, உள்தர மதிப்பீட்டு மையம் சார்பில் 05.01.2019 அன்று "Professional Ethics II: A Teacher – A Leader and Innovative Teaching" என்னும் ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி (FDP) ஏற்பாடு செய்யப்பட்டது.**திரு.R.செந்தூரன், President, Dr. A.P.J. Abdul Kalam's Vision**

**2020. மற்றும் முனைவர். K. கூடலிங்கம், Regional Joint Director of Collegiate Education(Retd), Madurai Region, Madurai. சிறப்புரையாற்றினார்கள்.**

ஆண்டுதோறும் உள்தர மதிப்பீட்டு மையம் மூலமாக All India Survey on Higher Education(AISHE) அறிக்கை, (asihe.gov.in) என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிற்கான All India Survey on Higher Education(AISHE) அறிக்கை 18.01.2019 அன்று அரசு போர்டலில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

**Atal Ranking of Institutions on Innovation Achievements (ARIIA) ன் Coordinator ஆக நூலகர், திருமதி.G.மங்கை நியமிக்கப்பட்டார்.** உள்தர மதிப்பீட்டு மையம் மூலமாக ARIIA Report ஆனது 31.01.2019 அன்று அரசு போர்டலில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

ஆசிரியர்களுக்கிடையே தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவை (NAAC) பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த , உள்தர மதிப்பீட்டு மையம் சார்பில் 15.02.2019 அன்று **"Awareness program on NAAC Methodology"** என்னும் கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. **முனைவர்.S.தீனதயாளன், Syndicate member, Madurai Kamaraj University, Associate Professor & Head, Department of Economics, The Madura College, Madurai சிறப்புரையாற்றினார்.**

நம் கல்லூரி இணையதளம் முனைவர்.சு.சிவக்குமார் தலைமையில், நம் கல்லூரியின் அன்றாட நிகழ்வுகளை, கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்து வருகிறது. மேலும் கல்லூரியின் தகவல் அனைத்தையும் கணினிமயமாக்கும் முயற்சியில் கல்லூரியின் வலைதள குழுவின் மூலம் உருவாக்கப்பட்ட 3 லட்சம் மதிப்பிலான Institution Information System மென்பொருளானது உள்தர மதிப்பீட்டு மையத்தின் மேற்பார்வையில் கல்லூரியின் ஆசிரியர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**6.Extension Activities :**

ஒரு மாணவனுக்கு படிப்பைத் தவிர, அவரவர் விருப்பத்திற்கேற்ப குறிப்பிட்ட துறையில் தனித்திறமையை வளர்க்க, வேலைக்குச் செல்வோர், சுயதொழிலில் ஈடுபடுவோர், ராணுவம், போலீஸ், விளையாட்டில் ஈடுபடுவோர் மற்றும் நுண்கலை என்று சொல்லக் கூடிய Fine Arts-ல் ஈடுபடுவோார் என்று முதலாமாண்டு மாணவ, மாணவியர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்து அவர்களுக்கு வாரம் ஒரு

முறை சிறப்பு வகுப்புகள் பேராசிரியர்களால் நடத்தப்படுகின்றது. இதன் பயனாக நமது கல்லூரியில் 3 ஆண்டுகள் முடித்து வெளியே செல்லக் கூடிய ஒவ்வொரு மாணவனும், ஒரு துறையில் சிறந்து விளங்கி, தமது வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்ப்பர் என்பதில் பெருமை கொள்கிறேன்.

**7. துறை வாரியான செயல்பாடுகள் :**

**a.வணிகவியல் துறை (DEPARTMENT OF COMMERCE)**

பாரம்பரியமிக்க ஏலவிவசாயிகள் சங்க கல்லூரியின் பெருமைமிகு வணிகவியல் மற்றும் ஆராய்ச்சி துறையின் சார்பாக இந்த 2018-19 ஆம் கல்வியாண்டின் பேராசிரியர்களின் சாதனைகளாவன பின்வருமாறு,

வணிகவியல் துறையின் சார்பாக தொடக்க விழாவானது 19-9-2018 அன்று மூத்த பேராசிரியர் முனைவர்.R.ஜெயபால் வணிகவியல் துறை தலைவர்(ஓய்வு) அவர்களும், ஏல விவசாயிகள் சங்க கல்லூரி தலைவர் திரு.S.V.சுப்பிரமணியன் அவர்களும் தொடக்கி வைத்து சிறப்புரையாற்றினர்.

மேலும் **GST path to take economy on faster growth** என்ற தலைப்பில் 24-9-2018 அன்று கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பட்டய **கணக்காளர் சீனிவாசன் அவர்களும், கோவை ICA- உதவித்தலைவர் பாலசுப்பரமணி அவர்களும் சிறப்புரையாற்றினர்.**

வணிகவியல் துறையின் சார்பாக **Impact of GST in cardamom industry before and after** என்ற தலைப்பில் 5-10-2018 அன்று கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கத்தில் ஏல வியாபாரிகள் சங்கச் செயலர் **திரு.ஞானவேல், மற்றும் பிரபாகரன்** ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அகில உலக கிருஷ்ணபக்தி இயக்கத்தின் சார்பாக மாணவர்களுக்கான **வாழ்க்கை நெறிக் கல்வி என்ற தலைப்பில் 24-1-2019 அன்று தேனி மாவட்ட ஆன்மீக தலைவர் திரு.K.G.தாஸ்** சுவாமிகள் மாணவர்களுக்கிடையே சிறப்புரை ஆற்றினார்.

நமது வணிகவியல் ஆராய்ச்சி துறையின் சார்பாக நமது கல்லூரி **பேராசிரியை விஜயலட்சுமி** அவர்களுக்கு 18-6-2018 அன்று முனைவர் பட்டம் பெறுவதற்கான viva-voce நடத்தப்பட்டது. மேலும் ஆராய்ச்சியாளர் சூரியஜோதி அவர்களுக்கும் முனைவர் பட்டம் பெறுவதற்கான viva-voce நடத்தப்பட்டது. அடுத்தபடியாக நமது கல்லூரி பேராசிரியர் **திரு.V.கிருஷ்ணகுமார் அவர்களுக்கும் 10-8-2018 அன்று முனைவர் பட்டம் பெறுவதற்கான viva-voce நடத்தப்பட்டது.**

முனைவர்.S.பாலமுருகன் அவர்கள் பல்கலைகழக மானிய குழுவில் அங்கீகரிக்கப்பட்ட ‘‘6’’ ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்பித்துள்ளார். அமெரிக்கன் கல்லூரி மற்றும் மன்னர் கல்லூரியில் நடைபெற்ற Research methodology spss package கருத்தரங்கில் கலந்து கொண்டார். பாரதிதாசன் கல்லூரியில் NAAC தொடர்பான **Institutional of assessment accredation** என்ற கருத்தரங்கில் கலந்து கொண்டார். 18-3-2019 இல் கம்மவார் சங்க கல்லூரி தேனி வணிகவியல் துறையின் நிறைவு விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார். **20-3-2019 அன்று N.S கல்லூரி தேனி M.Phil மாணவர்களுக்கான viva-voce ல் புறமதிப்பீட்டாளராக கலந்து கொண்டார்.**

முனைவர்.A.சுஜாதா அவர்கள், திருமதி.c.சித்ரா என்ற ஆராய்ச்சியாளர்க்கு வழிகாட்டியாக செயல்பட்டு அவருடைய கருத்துருவான, **“Service quality measurement and its impact on customer loyalty and study of new generation and foreign bank in Chennai,”** என்ற தலைப்பில் ஆராய்ச்சி மேற்கொண்டு அதற்கான முனைவர் பட்டம் பெற வழிகாட்டுதல் செய்தார் என்பது சாதனை குறிப்பிடத்தக்கது. **Social welfare journal இவ்வாராய்ச்சி கட்டுரையை சமர்பித்து அதற்காக ரொக்கப்பரிசு ரூ.4000 பெற்றார் என்பது பெருமைக்குரியதாகும்.** பேராசிரியர்களுக்குரிய மதுரை காமராஜர் பல்கலைகழகத்தில் பல்கலைகழக மானிய குழுவின் சார்பாக நவம்பர் 16 முதல் டிசம்பர் 13/2018 வரை நடந்த பட்ட பேராசிரியர்களுக்கான புத்தாக்க பயிற்சியிலும் கலந்து கொண்டார்.

முனைவர் V. கிருஷ்ணகுமார் அவர்கள் இந்திய உயர்கல்வி தொடர்பாக வெளியிட்ட இரண்டு புத்தகங்கள் Amazon-ல் best selling book என்ற நிலையை தொடர்ந்து தக்க வைத்து கொண்டுள்ளது**. International journal of transformation in accounting auditing and taxation என்ற இதழில் Editor**

**ஆக தேர்வு ஆகி தனது பணியினை பன்னாட்டு பேராசிரியர்களோடு இணைந்து செயல்பட்டு வருகிறார்.** பல்கலைகழக மானிய குழுவில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி இதழ்களில் “10” ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டு உள்ளார்.

முனைவர் திருமதி.T.இராமலட்சுமி அவர்கள், பல்கலைகழக மானிய குழுவின் சார்பாக மதுரை காமராசர் பல்கலைகழகத்தில் நடைபெற்ற பேராசிரியர்களுக்கான நவம்பர் 16 முதல் டிசம்பர் 13/2018 வரை நடந்த பட்ட புத்தாக்க பயிற்சியில் கலந்து கொண்டார். மேலும், ஆராய்ச்சி முனைவர்களுக்கான வழிகாட்டிக்குரிய தகுதி சான்றை இந்த கல்வியாண்டில் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், சேலம் K.S.R கல்லூரியில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கத்தில் தனது ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்பித்துள்ளார். உத்தமபாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கல்லூரியில் தேசிய கருத்தரங்கத்தில் கலந்து கொண்டார்.

பெரியகுளம் மேரிமாதா கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் கலந்து கொண்டார். பல்கலைகழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட **[UGC Approval No: 44120] shanlax International Journals –ல் A study of customer relationship management in automobile agencies with special reference to bodinayakanur** என்ற தலைப்பில் ஆராய்ச்சி கட்டுரை வெளியிட்டுள்ளார்.

முனைவர் K. வனீத்திஸ்வரி அவர்கள் நான்கு சர்வதேச ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். சி.பி.ஏ கல்லூரியில் நடைபெற்ற ICSSR –ஆல் நடத்தப்பட்ட பன்னாட்டு கருத்தரங்கம் ஆன Impact entrepreneur Traits among college student-ல் கலந்து கொண்டார். பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான On consumer inclusion and justice – AP paragdigm என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

பேராசிரியர் திரு.G.ராஜேஷ் அவர்கள் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற International conference-யில் overview of agricultural in tamilnadu என்ற தலைப்பில் தனது ஆராய்ச்சிக் கட்டுரையை சமர்பித்துள்ளார். மதுரை திருமலைநாயக்கர் கல்லூரியில் social marketing strategies in healthcare sector மற்றும் Research methodology spss package என்ற கூட்டமைப்பில் கலந்து கொண்டார்.

பல்கலைகழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட International Journal-ல் A study on socio-economic conditions of agricultural loan borrowers with special reference to canara bank in theni districts, என்ற தலைப்பிலும் A study of agricultural credit by economical banks in tamilnadu என்ற தலைப்பிலும் தனது இரண்டு ஆராய்ச்சிக் கட்டுரையை சமர்பித்துள்ளார்.

மதுரை சௌராஷ்டிரா கல்லூரியில் 28-8-18 அன்று நடைபெற்ற GST தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

மதுரை சௌராஷ்டிரா கல்லூரியில் GST தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் பேராசிரியர்கள், முனைவர். வனிதீஸ்வரி, அருண்குமார், மதுமலர், சேதுராமன், பாப்புலட்சுமி போன்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

மதுரை காமராசர் பல்கலைகழகத்தில் BIG DATA ANALATICS தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் பேராசிரியை மதுமலர், பாண்டிச்செல்வி போன்றோர்கள் கலந்து கொண்டனர்.

**வணிகவியல் துறையின் இரண்டாமாண்டு மாணவி புவனேஸ்வரி பெங்களுரில் நடைபெற்ற தேசிய அளவிலான கராத்தே போட்டியில் பெண்கள் பிரிவில் இரண்டாம் பரிசினையும், நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் நடைபெற்ற மாநில அளவிலான சிலம்பாட்ட போட்டியில் முதல் பரிசினையும் பெற்றார்.**

வணிகவியல் துறையின் முதலாமாண்டு மாணவி ஸ்ரீமதிஸஸ்திகா கல்லூரியின் fine arts committee சார்பாக பல்வேறு கல்லூரிகள் மற்றும் பல்கலைகழகத்தில் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளை பெற்றுள்ளார்.

.

**b.வேதியியல்துறை: (DEPARTMENT OF CHEMISTRY)**

வேதியியல்துறை மாணவி சு.சவிதா என்பவர் ஏப்ரல் - 2018ல் நடைபெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக தேர்வில் 6 வது இடம் பெற்றுள்ளார்

**முதலாமாண்டு ரா.கோவிந்த பாண்டி என்ற மாணவர் காந்தி அருங்காட்சியத்தில் மாநில அளவில் நடந்த போட்டியில் வெற்றி பெற்று கவர்னரிடம் பரிசு பெற்றுள்ளார்.**

**தேனி மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் நடைபெற்ற கட்டுரைப்போட்டியில் ரா.கோவிந்த பாண்டி என்ற மாணவர் முதலிடம் பெற்று ரூ.10,000/- பரிசு தொகை பெற்றுள்ளார்.**

“மூலக்கூறுகளின் முப்பரிமாண அமைப்பு” மற்றும் “CSIR தேர்வு பற்றி 13.07.2018 அன்று அய்யநாடார் ஜானகி அம்மாள் பேராசிரியர் Dr.S.சரவணன், அவர்கள் உரையாற்றினார்.

28,29 செப்டம்பர் - 2018 அன்று பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் நடந்த வேதியியல் கருத்தரங்கத்தில் இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவர்கள் எம்.மாளவிகா, பி.தனலெட்சுமி, பி.சாக்கரடீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இரண்டு M.Phil மாணவிகள் வேதியியல் பாடப்பிரிவில் பட்டம் பெற்றுள்ளனர்.

மூன்று ஆராய்ச்சி மாணவர்கள் (Ph.D) வேதியியல் பாடப்பிரிவில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் நடந்த வேதியியல் கருததரங்கத்தில் மூன்று Ph.D ஆய்வாளர்கள் கலந்து கொண்டார்கள்.

**c. கணிதத்துறை : (DEPARTMENT OF MATHEMATICS)**

பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியுடன் கணிதத்துறையால், **Latex என்னும் சான்றிதழ் கல்வி மாணவ, மாணவியருக்கு பயிற்றுவிக்கப்படுகிறது இதில் 35 மாணவ, மாணவியர்கள் பயில்கிறார்கள்.**

பேராசிரியர் டர்க்டர்.C.இள**ங்கோ** அவர்கள் - 6, டாக்டர்.A.மகேஷ்வரன் - 1, **டாக்டர்.K.கிருஷ்ணன்** - 2 டாக்டர்.V.ஹேமலதா – 2 இந்த ஆண்டு மொத்தம் 11 ஆராய்ச்சி கட்டுரைகள் வெளியிடப்பட்டிருக்கிறது **டாக்டர்.C.இளங்கோ** அவர்களின் வழிகாட்டுதலின் படி 2 மாணவர்கள் Ph.D முடித்திருக்கிறார்கள் **டாக்டர்.K.கிருஷ்ணன்** அவர்களின் வழிகாட்டுதலின் படி 4 மாணவர்கள் Ph.D முடித்திருக்கிறார்கள். கணிதத்துறை ஆராய்ச்சி துறையாக இருப்பதால் பிற கல்லூரிகளிலிருந்து 6 மாணவர்களுக்கு மாதிரி வாய்மொழி தேர்வு (Pre – Viva) வும் 2 மாணவர்களுக்கு Vivaவும் (வாய்மொழி தேர்வும்) நடந்துள்ளது.

டாக்டர்.V.ஹேமலதா, அவர்கள் 16.11.2018 முதல் 13.12.2018 வரை 28 நாட்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நடந்த புத்தாக்கப் பயிற்சியில் பங்கு கொண்டார்.

இத்துறையின் மூலம் 09.01.2019 அன்று “rigor in Mathematics” என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது.

**கடந்த ஆண்டு நடைபெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக தேர்வில் பல்கலைக்கழக அளவில் முதுகலை மாணவி E.தீபிகா முதல் தரம் பெற்றுள்ளார்.**

22.12.2018 அன்று **Univertsity of Delhi யில் "AIAP Excellance award" என்ற Award** டர்க்டர்.C.இள**ங்கோ** அவர்கள் பெற்றுள்ளார்

.

முனைவர்.சி.இளங்கோ அவர்கள் 30.12.2018 அன்று தியாகராஜர் கல்லூரி, கணிதத்துறையால் நடத்தப்பட்ட **"Stochastic Differential Equations via Dynamical Systems" for winter school on Dynamical system** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்

முனைவர்.சி.இளங்கோ அவர்கள் 18.12.2018 அன்று N.S கல்லூரி, கணிதத்துறையால் நடத்தப்பட்ட **"Number System and Gamma Function"** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

முனைவர்.சி.இளங்கோ அவர்கள் 18.12.2018 அன்று திரவியம் கல்லூரியில் நடத்தப்பட்ட **"Ramanujam Birth day Celebrations"** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

முனைவர்.சி.இளங்கோ அவர்கள் 21.12.2018 முதல் 23.12.2018 வரை University of Delhi, யில் நடத்தப்பட்ட **"Optimal Inventory Control in supply chain with Retrial Demand Semi – Markov Decision Process" – ETISCRM - 2018 என்ற தலைப்பில்** சிறப்புரையாற்றினார்.

முனைவர்.கே.கிருஷ்ணன் அவர்கள் 10.08.2018 அன்று பாத்திமா கல்லூரி, மதுரை நடத்தப்பட்ட **"Stochastic Inventory Models"** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

முனைவர்.கே.கிருஷ்ணன் அவர்கள் 13.12.2018 அன்று ஸ்ரீ ஆதி சன்சங்கிரி பெண்கள் கல்லூரியில் நடத்தப்பட்ட **"Applications of delay differential equations in biological system"** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

முனைவர்.கே.கிருஷ்ணன் அவர்கள் உத்தமபாளையம், ஹாஜி இராவுத்தர் கல்லூரியில் நடத்தப்பட்ட **International Conference** யில் கலந்து கொண்டார்.

## d. பொருளியல் துறை (DEPARTMENT OF ECONOMICS)

பொருளியியல் துறை சார்பாக மாணவர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு (23.08.2018) பயிற்சி முகாம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் Erode Arts and Science College, பொருளியியல் துறைத் தலைவர் பேராசிரியர் **திரு.N.Mani** அவர்கள் "**GST and Its Imapct on Indian Economy"**என்ற தலைப்பில் சொற்ப்பொழிவு ஆற்றினார். இதில் சிறப்பு விருந்தினராக கணிதவியல் துறைத்தலைவர் பேராசிரியர் ஆர்.பாண்டி அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

## .e. வரலாற்றுத் துறை (DEPARTMENT OF HISTORY)

### கள ஆய்வுக் கல்வி

02.8.2018ல் வரலாற்று மாணவ, மாணவிகள் அனைவரும் கழுகுமலை – வீருசிகாமணி – கீழடி ஆகிய இடங்களுக்கு வராலாற்று கள ஆய்வு சென்று வந்தனர்.

### பேராசிரியர்கள் கலந்து கொண்ட செயல்பாடுகள்

முனைவர்.ஆ.ஞானசேகரன் துறைத்தலைவர் அவர்கள் சங்கரா கலை அறிவியல் கல்லூரி நடத்திய பன்னாட்டு கருத்தரங்கில் கலந்து கொண்டு **" பத்துப் பாட்டு இலக்கியத்தில் வைகை ஆறு"** என்னும் தலைப்பில் கட்டுரை வெளியிட்டள்ளார்.

முனைவர்.ஆ.ஞானசேகரன் துறைத்தலைவர் அவர்கள் பழனி அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 22.09.2018 அன்று நடைபெற்ற மாநில அளவிலான கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

26.07.2018ல் போடி – பிச்சாங்கரைப் பகுதியல் 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கல்திட்டைகள் கள ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டு, அனைத்து செய்திகளும் தொலைக்காட்சிகள் மற்றும் செய்தி தாள்களில் வெளியிடப்பட்டது. இதில் முதல்வர், துறைபேராசிரியர்கள் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

10.10.2018ல் திண்டுக்கல் - சித்தரேவு அருகிலுள்ள நெல்லூரில் 18ம் நூற்றாண்டை சேர்ந்த இரு நடுகற்கள் கண்டறியப்பட்டு செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது

04.01.2018-ல் ஆண்டிபட்டிக்கருகில் கி.பி. 15ஆம் தூண் சதிக்கல் கண்டுபிடிக்கப்பட்டு செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டது.

11.03.2019 திங்களன்று முனைவர்.சி.மாணிக்கராஜ் தலைமையில் தேனி மாவட்டம் கோம்பைக்கருகில் யானைகுத்திபட்டான் வீரக்கல் - கி.பி. 15-16-ம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த வீரக்கல் ஒன்று 32 மாணவ, மாணவியர்கள் கள ஆய்வில் ஈடுபட்ட போது கண்டறியப்படது. இச்செய்தி அனைத்து செய்தித்தாள்களிலும் பிரசுரிக்கப்பட்டது. இதில் முதுகலை மாணவ, மாணவியர்கள், மற்றும் பேராசிரியர் முனைவர்.எம்.கனகராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

**கலந்து கொண்ட கருத்தரங்குகள் மற்றும் கருத்துப் பட்டறைகளும்**

முனைவர்.சி.மாணிக்கராஜ், உதவிப்பேராசிரியர் அவர்கள் 27.02.2019ல் மதுரை பாத்திமா பெண்கள் கல்லூரி நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

முனைவர்.சி.மாணிக்கராஜ், உதவிப்பேராசிரியர் அவர்கள் 22.09.2018-ல் அருள்மிகு பழனியாண்டவர் கலை பண்பாட்டுக் கல்லூரி நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

முனைவர்.சி.மாணிக்கராஜ், உதவிப்பேராசிரியர் அவர்கள் 18.11.2018-ல் மதுரை கருத்துப்பட்டறை நடத்திய ஒரு நாள் தேசிய கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

பேராசிரியர். ஆர்.கபேஷ் அவர்கள் ஹார்வேர்டு பல்கலைக்கழகம் நடத்திய MOOC கோர்ஸ்ல் **"The cities and the past, present and Future urban life"** என்னும் படிப்பை முடித்துள்ளார்.

பேராசிரியர். ஆர்.கபேஷ் அவர்கள் **Arnbasty International** நடத்திய MOOC கோர்ஸ்-ல் **"Human Rights – Rights of Refugees**" என்னும் தலைப்பில் படித்து முடித்துள்ளார்.

பேராசிரியர். ஆர்.கபேஷ் அவர்களின் **Agronamy Condition of Tamilnadu - A Study** என்னும் கட்டுரை அக்டோபர் 2018ல் நிலம் என்னும் ஆய்விதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர். ஆர்.கபேஷ் அவர்கள் டிசம்பர் 2018ல் **Journal-ல் An outlook of migration in TamilNadu Universal review** என்னும் தலைப்பில் கட்டுரை வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர். ஆர்.கபேஷ் அவர்கள் 21.12.2018ல் Government Arts college, Madurai –யில்" நடைபெற்ற கருததரங்கில் **காடுவெட்டி சித்தரின் சாதனைகள்"** என்னும் தலைப்பில் கட்டுரை வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர். ஆர்.கபேஷ் அவர்கள் 22.09.2018 அன்று A.P.A கல்லூரி, பழனியில் நடைபெற்ற ஒரு நாள் **State level** கருத்தரங்கில் கலந்து கொண்டார். பேராசிரியர். ஆர்.கபேஷ் அவர்கள் 18.11.2018 அன்று மதுரையில் நடைபெற்ற ஒரு நாள் **National level** கருத்தரங்கு மற்றும் கருத்துப் பட்டறையிலும் கலந்து கொண்டார்.

### f. ஆங்கிலத்துறை (DEPARTMENT OF ENGLISH)

2018-ம் ஆண்டு ஜீலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களின் விடுமுறை சனிக்கிழமைகளில் **"In Service Training to the Faculty Members"** என்கிற தலைப்பில் - நமது கல்லூரியில் உதவி பெறும் மற்றும் சுயநிதி பிரிவு ஆங்கிலத்துறைகளில் பணிபுரிந்து வரும் பேராசிரியர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

31.08.2018 அன்று ஆங்கில பட்ட வகுப்புகள் படிக்கும் 120 மாணவ, மாணவியர்கள் கொடைக்கானல் கிறித்துவ கல்லூரியில் **"Mouse Trap"** என்னும் ஆங்கில நாடகம் மேடை நடிப்பு நிகழ்ச்சிக்கு சென்று வந்தனர்.

14.09.2018 அன்று, மதுரை அமெரிக்கன் கல்லூரியில் நடித்துக் காட்டப்பட்ட Webster எழுதிய **"The Dutchess of Malfi"** என்னும் நாடகத்திற்கு ஆங்கிலத்துறை மாணவ, மாணவியர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஆங்கிலத்துறையில் உதவிப்பேராசிரியராகப் பணிபுரிந்து வரும் Dr.C.பழனிவேல்ராஜன் மற்றும் V.அருண்குமார் அவர்கள் 02.09.2019 அன்று மதுரை விவேகானந்தர் கல்லூரியில் நடைபெற்ற **"Approaches Methods and theories towards reading and re-reading"** என்கிற பயிற்சி பட்டறையில் பங்கெடுத்து வந்துள்ளனர்.

ஆங்கிலத்துறையில் உதவிப்பேராசிரியராகப் பணிபுரிந்து வரும் Dr.V..விமலா அவர்கள் 16.02.2019 அன்று பெரியகுளம் மேரிமாதா கல்லூரியில் “Modern Drama” என்கிற தலைப்பில் நடைபெற்ற **National Level workshop-**ல் பங்கு பெற்றார். அதே கல்லூரியில் 23.01.2019 அன்று **“Remembering V.S.Neipal”** என்கிற தலைப்பில் நடைபெற்ற மாநில அளவிலான ஒரு நாள் கருத்தரங்கில் பங்கு பெற்று வந்துள்ளார். மார்ச் 1 மற்றும் 2 ஆகிய தேதிகளில் திருச்சி நேஷனல் கல்லூரியில் **“Contemporary Celebration on Multi-cultural Literature”** என்கிற தலைப்பில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

ஆங்கிலத்துறையில் உதவிப்பேராசிரியாராக பணிபுரிந்து வரும் திரு.ஏ.அருண்குமார் அவர்கள் எழுதிய “Hope and Despair” “Burden of Being Black in Raist Land” மற்றும் “Strenous Motherhood” ஆகிய ஆய்வுக் கட்டுரைகள், பல்கலைக்கழக மானியக்குழுவில் அங்கீகாரம் பெற்றுள்ள “International Journal of English Language” என்கிற இதழில் முறையே செப்டம்பர் 18, ஜனவரி 19 மற்றும் பிப்ரவரி 19 ஆகிய மாதங்களில் வெளியிடப்பட்டுள்ளது.

**g. இளங்கலை கணினி அறிவியல் (Computer Science Department)**

இந்த கல்வியாண்டின் முதல் நிகழ்வாக ஜீன் 26 முதல் 27 வரை இரண்டு நாட்கள் **“Foundation Course in Phython Programming**’’ என்ற தலைப்பில் பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. இப்பயிற்சிப் பட்டறையின் துவக்கவிழா 26.06.2018 அன்று முற்பகலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் துறைத்தலைவர் முனைவர்.S.சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை நல்கினார், இணைப்பேராசிரியர் திரு.K.மாடசாமி அவர்கள் பயிற்சிப்பட்டறையின் கருப்பொருள் பற்றி எடுத்துக் கூறினார். இணைப்பேராசிரியர் முனைவர்.R.முருகேசன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக உதவிப்பேராசிரியர் திருமதி.K.நித்தியானந்தகுமாரி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

அதன் பிறகு பயிற்சிப்பட்டறை துவங்கப்பட்டது. வல்லுநர்.S.சதீஸ்குமார்,M.Sc., M.Phil அவர்கள் **“Python”** வன்பொருள் பற்றிய வகுப்புகள் எடுத்தார்.

28 ஆம் தேதியிலிருந்து அடுத்த பயிற்சிப் பட்டறை வகுப்பான **“Flash”** வன்பொருள் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. வல்லுநர்.S.சதீஸ்குமார்,M.Sc., M.Phil அவர்கள் **“2D Animation Course in Flash”** என்ற தலைப்பில் 29.06.2018 ஆம் தேதியில் வகுப்புகள் எடுத்தார்.

29.06.2018 ஆம் தேதி மாலை 4 மணிக்கு நிறைவு விழா நடைபெற்றது. பங்கு பெற்ற மாணவ, மாணவியரிடம் இருந்த நிகழ்ச்சியைப் பற்றிய கருத்து கணிப்பு பெறப்பட்டு விழா இனிதே நிறைவடைந்தது.

ஜீலை 17, 2018 அன்று துறையின் கணினி மன்றத் துவக்க விழா மற்றும் முதலாமாண்டு மாணவர்களை வரவேற்கும் விழா நடைபெற்றது. நமது கல்லூரியின் முதல்வர் முனைவர்.T.ராஜகுமாரன் விழாவிற்கு தலைமை தாங்கி தலைமை உரை வழங்கினார். துறைத்தலைவர் முனைவர்.S.சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை நல்கினார், இணைப்பேராசிரியர் திரு.K.மாடசாமி அவர்கள் சிறப்பு விருந்தினரைப் பற்றி அறிமுக உரை நல்கினார். விழாவின் சிறப்பு விருந்தினராக **திரு.ஆர்.மோகனசுந்தரம், முன்னாள் ஆங்கிலத்துறை, இணைப்பேராசிரியர்,** ஏ.வி.ச.கல்லூரி,போடிநாயக்கனூர் அவர்கள் சிறப்புரையாற்றினார். இணைப்பேராசிரியர் முனைவர்.R.முருகேசன் அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவுப் பெற்றது.

கடந்த 27.07.2018 அன்று ஒரு நாள் கருத்தரங்கு **“Skills and Career Opportunities for IT Students – Present Scenario”** என்ற தலைப்பில் நடைபெற்றது. இணைப்பேராசிரியர் முனைவர்.R.முருகேசன் அவர்கள் இவ்விழாவினை ஏற்பாடு செய்தார். துறைத்தலைவர் முனைவர்.S.சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை நல்கினார், முனைவர்.T.ராஜகுமாரன் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி தலைமையுரை நல்கினர். **சிறப்பு விருந்தினர் திரு.முகம்மது அபுபக்கர் கசாலி, B.E., M.B.A, Infosys, Chennai** அவர்களுக்கு நமது கல்லூரி முதல்வர் அவர்களால் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. பின்னர் சிறப்பு விருந்தினர் தகவல் தொழில் நுட்ப துறையில் மாணவர்களுக்கான கல்வி மற்றும் வேலை வாய்ப்புப் பற்றி சிறப்புரையாற்றினார். இறுதியாக இணைப்பேராசிரியர் திரு.K.மாடசாமி அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது.

கடந்த 28.09.2018 அன்று ஒரு நாள் கருத்தரங்கு **"Applications of IOT"**என்ற தலைப்பில் நடைபெற்றது. உதவிப்பேராசிரியை திருமதி.கே.நித்தியானந்தகுமாரி அவர்கள் இவ்விழாவினை ஏற்பாடு செய்தார். துறைத் தலைவர் முனைவர்.S.சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர்.T.ராஜகுமாரன் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி தலைமையுரை நல்கினார். **சிறப்பு விருந்தினர் திரு.முருகேஸ்வரன், M.S., M.E., (Ph.D) பெங்களூர்** அவர்கள் தகவல் தொழில் நுட்பத் துறையின் பயன்பாடுகளைப் பற்றி மாணவர்களுக்கு சிறப்புரையாற்றினார். இறுதியாக கணினி மற்றும் தொழில் நுட்பத்துறையைச் சார்ந்த உதவிப்பேராசிரியை செல்வி.S.ரோஹினி அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது.

08.01.2019 அன்று **"Awareness on Mathematics for Computer Graduates"** என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கப்பட்டது. துறைத் தலைவர் முனைவர்.S.சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இணைப்பேராசிரியர் திரு.K.மாடசாமி அவர்கள் சிறப்பு விருந்தினர் பற்றிய அறிமுக உரை வழங்கினார். சிறப்பு விருந்தினர் முனைவர்.C.இளங்கோ, கணிதத்துறையைச் சார்ந்த இணைப்பேராசிரியர் அவர்கள் கணிதம் பற்றிய விழிப்புணர்வை நல்கினார். இறுதியாக இணைப்பேராசிரியர் முனைவர்.R.முருகேசன் அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது.

கடந்த ஜனவரி 4, 2019 மற்றும் பிப்ரவரி 22, 2019 ஆகிய இரு தேதிகளில் **"PHP and Data base Programming"** என்ற தலைப்பில் நடைபெற்றது. இணைப்பேராசிரியர்.திரு.K.மாடசாமி அவர்கள் இவ்விழாவினை ஏற்பாடு செய்தார். துறைத் தலைவர் முனைவர்.S.சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இணைப்பேராசிரியர் முனைவர்.R.முருகேசன் அவர்கள் பயிற்சிப் பட்டறையின் கருப்பொருள் பற்றி எடுத்துக் கூறினார். இணைப்பேராசிரியர் திரு.K.மாடசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அதன் பிறகு வல்லுநர் **திருமதி.மீனாட்சி சுரேஷ், CSC, போடிநாயக்கனூர்** அவர்கள் "PHP" சம்மந்தப்பட்ட முக்கியமான பயிற்சி பாடங்களை மாணவர்களுக்கு நடத்தினார். பின்னர் கலந்து கொண்ட மாணவர்களிடம் பயிற்சி வகுப்புகள் பற்றி கருத்து கணிப்பு கேட்கப்பட்டது. இறுதியாக உதவிப்பேராசிரியை திருமதி.கே.நித்தியானந்தகுமாரி அவர்கள் நன்றியுரை நவிழ விழா இனிதே நிறைவடைந்தது.

கடந்த பிப்ரவரி மாதம் இறுதியில் 21.02.2019 மற்றும் 25.02.2019 ஆகிய இரு நாட்களில் எமது துறையில் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு கூட்டம நடைபெற்றது. இதில் மாணவர்களின் செயல்பாடுகள் மற்றும் அவர்களின் மதிப்பெண்கள் பற்றி கலந்து ஆலோசிக்க இந்த சந்திப்பு கூட்டத்தை உதவிப்பேராசிரியை திருமதி.கே.நித்தியானந்தகுமாரி அவர்கள் வரவேற்புரை நல்கி விழாவினை துவக்கி வைத்தார். துறையின் தலைவர் முனைவர்.S.சிவக்குமார் அவர்கள் இந்தக் கூட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கிக் கூறினார்.இணைப்பேராசிரியர் திரு.K.மாடசாமி அவர்கள் முதலாமாண்டு மாணவர்களின் அறிக்கையையும், இணைப்பேராசிரியர் முனைவர்.R.முருகேசன் இரண்டாமாண்டு மாணவர்களின் மொத்த அறிக்கையையும், உதவிப்பேராசிரியை திருமதி.நித்தியானந்தகுமாரி மூன்றாமாண்டு மாணவர்களின் மொத்த அறிக்கையையும் வழங்கினார். பெற்றோர்களிடம் இருந்து கருத்துக் கணிப்பு பெறப்பட்டது. இறுதியாக உதவிப்பேராசிரியை செல்வி.G.கௌரி அவர்கள் நன்றியுரை நவிழ விழா இனிதே நிறைவு பெற்றது.

கடந்த மார்ச் 2019 தொடக்கத்தில் 1.3.2019 ஆம் தேதி அன்று **A Special Session on “Quantitative Aptitude”** என்ற தலைப்பில் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இணைப்பேராசிரியர் திரு.K.மாடசாமி அவர்கள் வரவேற்புரை நல்கி இவ்விழாவை துவக்கி வைத்தார். கணிதவியல் துறையைச் சார்ந்த இணைப்பேராசிரியர் முனைவர்.C.இளங்கோ அவர்களால் நடத்தப்பட்டது. அதன் பின்னர் சிறப்பு விருந்தினர் மாணவர்களுக்கு **“Quantitative Aptitude”** பாடங்களை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கினார். இந்த சிறப்பு பகுதியானது மாணவர்களுக்கு மிகவும் உபயோகமானதாக அமைந்தது. இறுதியாக உதவிப்பேராசிரியை திருமதி.K.நித்தியானந்தகுமாரி அவர்கள் நன்றியுரை நவிழ விழா இனிதே நிறைவடைந்தது.

இந்தக் கல்வியாண்டின் இறுதி நிகழ்வாக ஒரு நாள் கருத்தரங்கு **“Emerging Careers in Computer Science”** என்ற தலைப்பில் 07.03.2019 அம் தேதியன்ற நடத்தப்பட்டது. துறைத் தலைவர் முனைவர்.S.சிவக்குமார் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர்.T.ராஜகுமாரன் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி தலைமையுரை நல்கினர். இந்தக் கருத்தரங்கின் கருப்பொருள் குறித்து இணைப்பேராசிரியர் திரு.K.மாடசாமி அவர்கள்

உரையாற்றினார். அதன் பின்னர் வல்லுநர் **திரு.துரைராம் சிதம்பரம் Centre Head, livewire – CADD Centre, Bodi மற்றும் திரு.J.குணபாலன் Centre Head, Livewire** கணினி அறிவியல் துறையில் உள்ள வளர்ந்து வரும் தொழில்களைப் பற்றி மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். மாணவர்களுக்கு தொழில் துறையைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. இறுதியாக இணைப்பேராசிரியர் முனைவர்.R.முருகேசன் அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது.

பெரியகுளம், மேரிமாதா கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிகளுக்கிடையிலான போட்டியில் எமது துறையைச் சேர்ந்த 7 மாணவர்கள் பங்கு பெற்று, அதில் **“Art from waste”** என்ற போட்டியில் மூன்றாமாண்டு மாணவர்கள் **பிரவீண்குமார் மற்றும் சசிசுதர்ஷன்** கலந்து கொண்டு மூன்றாம் பரிசுப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.

இந்தக் கல்வியாண்டில மட்டும் கணினி அறிவியல் துறை சார்பாக 9 பயிற்சிப் பட்டறைகள் மாணவர்களுக்கு மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

### h. தமிழ் மன்றம்

தமிழ்த்துறைத் தலைவர் முனைவர்.க.மலைச்சாமி அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு தமிழ்ப் பாடத்திட்டக் குழுவில் உறுப்பினராக உள்ளார்.

இக்கல்வியாண்டில் முனைவர் லெ.அலமேலு அவர்கள் பன்னாட்டு இதழிலும், கருத்தரங்கிலும் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். உதவிப்பேராசிரியை வே.மீனா அவர்கள் பன்னாட்டு ஆய்விதழ்களில் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். முனைவர்.ஜெ.தேவர் பொம்மி நாயக்கர் அவர்கள் பன்னாட்டு ஆய்விதழில் கட்டுரை வெளியிட்டுளளார். **பி.ஏ ஆங்கில இலக்கிய மாணவி N.ரி.்.ப்சாலிகா பகுதி – I, தமிழ் பல்கலைக்கழகத் தர வரிசைப்பட்டியலில் 7 ஆம் இடம் பெற்றுள்ளார்.**

### தமிழ் மன்றம் சார்ந்த போட்டிகள் :

தமிழ்த்துறை அளித்த ஊக்கத்தின் அடிப்படையில் 2018 – 2019 ஆம் கல்வியாண்டில் மாணவ- மாணவியர்கள் பல்வேறு கல்லூரி மற்றும் சங்கங்கள் சார்ந்த நிகழ்வில் பங்கு பெற்று பரிசுத் தொகையினையும் வென்றுள்ளனர்.

தமிழ் வளர்ச்சித்துறை சார்பாக தேனி மருத்துவ கல்லூரியில் 28.06.2018 ஆம் நாளன்று நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கான பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளில் நமது கல்லூரி மாணவர்களான M.கோபிநாத் (மூன்றாமாண்டு வரலாறு) G.நந்தினி (இரண்டாமாண்டு வேதியியல்) P.முத்துலெட்சுமி ஆகியோர் பங்குப் பெற்றனர். **இதில் மாணவர் M.கோபிநாத் கவிதைப் போட்டியில் மூன்றாமிடத்தை மாவட்ட அளவில் பெற்றதுடன் பரிசுத் தொகை ரூ.2000/- வென்று மாநில அளவிலும் பரிந்துரைக்கப்பட்டார்.**

14.09.2018 அன்று தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ் வளர்ச்சித்துறைச் சார்பாக நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதலாமாண்டு **வேதியியல் மாணவர் ரா.கோவிந்தபாண்டி முதல் பரிசுக்கான தொகை ரூ.10,000/-ம் கவிதைப் போட்டியில் மூன்றாமாண்டு வரலாற்றுத் துறை மாணவர் M.கோபிநாத் மூன்றாம் பரிசு ரூ.5000/-ம் வென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தனர்.**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மதர் பௌன்டேஷன் இணைந்து நடத்திய பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டியில் முதலாமாண்டு வேதியியல்துறை **மாணவர்.ரா.கோவிந்த பாண்டி மூன்றாம் பரிசும் இரண்டாமாண்டு வேதியியல்துறை மாணவி G.நந்தினி பேச்சுப்போட்டியில் முதல் பரிசும் பெற்றனர்.**

பாரத் நிக்கேதன் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான இலக்கியப் போட்டியில் 08.02.2019 அன்று **இரண்டாமாண்டு ஆங்கிலத்துறை மாணவி காளிஸ்வரி கவிதைப்போட்டியில் முதலிடத்தையும் பேச்சுப்போட்டியில் M.கோவிந்தபாண்டி (முதலாமாண்டு வேதியியல்) முதலிடத்தையும் வென்றனர்.**

பெரியகுளம் தமிழ் இலக்கிய மன்றம் சார்பாக 09.02.2019 அன்று நடைபற்ற திருக்குறள் சார் கவிதைப் போட்டியில் நமது கல்லூரி மாணவி M.காளிஸ்வரி (இரண்டாமாண்டு ஆங்கிலம்) முதல் பரிசுக்கான தொகை ரூ.500/-ஐ பெற்றார்.

2019 ஆம் ஆண்டிற்கான ‘‘தைப் பொங்கல் சங்கமம்’’தமிழ்த்துறையால் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் தேவராட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம், நாட்டுப்புறநடனம் என பல கலைகளும் அரங்கேற்றப்பட்டது. இந்நிகழ்வின் ஏற்பாடுகளை தமிழ்துறைத் தலைவரும் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளருமான முனைவர்.க.மலைச்சாமி அவர்கள் சிறப்பாக செய்திருந்தார்.

**i.இயற்பியல் துறை: (Department of Physics)**

இயற்பியல்துறையின் சார்பாக செப்டம்பர் 7-ம் தேதி அன்று சோலார் மின்கலம் ஓர் அறிமுகம் என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்வு மாணவர்களுக்கு சோலார் மின்கலம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

பேராசிரியர் அ.சுபலட்சுமி அவர்கள் ஜனவரி 7 மற்றும் 8-ம் தேதிகளில் காந்திகிராம பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கம் மற்றும் மதுரை தியாகராஜர் கல்லூரியில் பிப்ரவரி 12 மற்றும் 13-ம் தேதியில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு ஆய்வு கட்டுரைகளை சமர்பித்துள்ளார்.

**j. தாவரவியல் துறை: (Department of Botany)**

தாவரவியல்துறை, அக்டோபர் 26, 2018 அன்று ஒரு நாள் கருத்தரங்கு சுப்புராஜ் நினைவு A/c அரங்கத்தில் நடைபெற்றது. முதல்வர் முனைவர்.T.ராஜகுமாரன் அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றினார். முனைவர்.R.ராசாபு, Ph.D, உதவிப்பேராசிரியர், உயிரியல்துறை, காந்தி கிராம் பல்கலைக்கழகம், திண்டுக்கல், **“பல்லுயிர் பாதுகாப்பு”** என்ற தலைப்பில் மாணவர்களுக்கு முக்கிய ஆலோசனைகள் வழங்கப்பட்டது. இந்த கருததரங்கில் தாவரவியல்துறை தலைவா முனைவர்.சி.கோபி, அவர்கள் வரவேற்புரை வழங்கினர். முனைவர்.ஏ.மோகன்ராஜ், உதவிப்பேராசிரியர் அவர்கள் நன்றி தெரிவித்தார்.

09.01.2019 அன்று, உயிரியியல் அறிவியலில் புதுமையான ஆராய்ச்சி பற்றிய சர்வதேச மாநாடு (ICCBS – 2019) விலங்கியல் ஆராய்ச்சிதுறை, PMT கல்லூரி மேலநீலிதநல்லூர், சங்கரன்கோவில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் தாவரவியல்துறை மாணவர்களுடன் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். முனைவர்.சி.கோபி மற்றும் முனைவர்.ஏ.மோகன்ராஜ் அவர்கள் ஆராய்ச்சி கட்டுரைகள் Poster Presentation சமர்ப்பிக்கப்பட்டது. சிறப்பாக விவாதித்த முனைவர்.ஏ.மோகன் ராஜ் அவர்கள் முதல் பரிசை பெற்றார்.

முனைவர்.சி.கோபி அவர்கள் 13.02.2019 முதல் 05.03.2019 வரை (21 நாட்கள்) UGC – மனிதவள மேம்பாட்டு மையம், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூரில் நடைபெற்ற உயிரியல் அறிவியல் பற்றிய புத்தாக்க பயிற்ச்சியில் பங்கு பெற்றார்.

முனைவர்.சி.கோபி அவர்கள் B.sc Botany Ancillary மாணவர்கள் 50 பேர் கல்வி சுற்றுப்பயணமாக பெரியகுளம் வுயேரு, தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், ஆய்வுக்கூடங்கள் பார்வையிடுதல் என கல்வி விழிப்புணர்வு 09.04.2018 அன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

**k. இளங்கலை வணிக நிர்வாகத்துறை (BBA Department)**

நமது கல்லூரியல் 27.07.2018 அன்று வணிக நிர்வாகவியல் துறை சார்பாக **"Budding Leaders- Skills and Qualities Required"** என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக **Dr.G.Umashankar. M.A., Ph.D., Director, Janshikshnan Sansthan, Ministry of Skill Development and Entrepreneurship. Government of India, Coimbatore** அவர்கள் கலந்து கொண்டார்.

நமது கல்லூரியல் 03.10.2018 அன்று வணிக நிர்வாகவியல் துறை சார்பாக "Over views of Securities and Mutual Funds" என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக Mr.B.Badrinarayan, M.B.A., Sr.Executive BSE Ltd, Chennai அவர்கள் கலந்து கொண்டார்.

நமது கல்லூரி வணிக நிர்வாகவியல் துறை மாணவர்கள் மூன்று நாள் 04.10.2018 முதல் 06.10.2018 வரை "Industrial Visit and Tour" Coimbatore & Ooty சென்று பார்வையிட்டனர்.

நமது கல்லூரி வணிக நிர்வாகவியல் துறை பேராசிரியர்கள் திரு.எஸ்.சுரேஸ்குமார், மற்றும் திரு.பி.ஜெகதிஸ் அவர்கள் பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் வணிகவியல்துறை சார்பாக நடைற்ெற கருத்தரங்கில் கட்டுரை சமர்பித்தனார் அந்த கட்டுரை **Journal of Emerging Technologies and Innovative Research, An International open Access Journal (UGC Approval)** ல் வெளியிடப்பட்டது.

நமது கல்லூரி வணிக நிர்வாகவியல் துறை பேராசிரியர் திரு.பி.ஜெகதிஸ் அவர்கள் **University of Madras, Department of Commerce & National Academy of Customs Indirect Taxes and Narcotics (NACIN) இணைந்து (GST) Two days Faculty development Programme (FDP) on GST** ல் கலந்து கொண்டு பயிற்சி பெற்றார்.

நமது கல்லூரி வணிக நிர்வாகவியல் துறை 15 மாணவர்கள் 07.02.2019 விருதுநகர் செந்தில் குமார் நாடார் கல்லூரி, வணிக நிர்வாகவியல் துறை சார்பாக நடைபெறற **"Win Win 2019" State Level Management meet** ல் கலந்து கொண்டனர்.

நமது கல்லூரி வணிக நிர்வாகவியல் துறை 27 மாணவர்கள் 08.02.2019 அன்று ஆண்டிபட்டி, பாரத் நிகிதன் இன்ஜினியரிங் கல்லூரியல் நடைபெறற **"Inter College Cultural Fest"** கலந்து கொண்டு நமது கல்லூரி மாணவர்களுடன் சேர்ந்து Over all Champion பட்டம் வென்றனர்.

நமது கல்லூரி வணிக நிர்வாகவியல் துறை 20 மாணவர்கள் திண்டுக்கல் Vijay Institute of Management- ல் வணிக நிர்வாகவியல் துறை சார்பாக நடைபெற்ற **"Inter college Talentron 19 Fest"** ல்கலந்து கொண்டனர். இதில் Selfie Contest ல் BBA மூன்றாம் ஆண்டு மாணவர்கள் ரேவந்த், முரளிதரன், மனோஜ்குமார், சத்தியபிரகாஷ் ஆகியோர் முதல் பரிசும், Ad-Zap ல் சரவணக்குமார், மனோஜ்குமார், கார்த்திக், அஜித்குமார், சத்தியபிரகாஷ், மூன்றாம் பரிசும், MIMUGல் மனோஜ்குமார், பாலமுருகன், கார்த்திக், மாதவன், பிரேம்குமார் ஆகியோர் மூன்றாம் பரிசும் வென்றனர்.

நமது கல்லூரி வணிக நிர்வாகவியல் துறை பேராசிரியர்கள் திரு.எஸ்.சுரேஸ்குமார், முனைவர்.எஸ்.விஜயலெட்சுமி, திரு.கே.பரத்ராஜா மற்றும் திரு.பி.ஜெகதிஸ் ஆகியோர் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த இரண்டு நாள் தேசிய அளவிலான கருத்தரங்கில் ஆய்வுக் கட்டுரை சமர்பித்தனார்.

26.02.2019 அன்று மதுரை தியாகராஜா கல்லூரி வணிக நிர்வாகவியல் துறை சார்பாக நடைபெற்ற **One day state level students seminar on "Impact of Plastic Ban on Business and Society"** ல் நமது கல்லூரி வணிகநிர்வாகவியல் துறை மாணவர்கள் 10 கலந்து கொண்டனர். இதில் **Paper Presentation-ல் அமர்நாத் முதல் பரிசு பெற்றார்**. Product Launch-ல் பிரிவின்குமார், அஜித் முதல் பரிசு பெற்றனர். Ad-zap-ல் சரவணக்குமார், மனோஜ்குமார், கார்த்திக், அஜித்குமார், சத்தியபிரகாஷ், இரண்டாம் பரிசு பெற்றனர்.

01.3.2019 அன்று பெரியகுளம் மேரி மாதா கல்லூரி, வணிக நிர்வாகவியல் துறை சார்பாக நடைபெற்ற state level Management meet 2019" ல் நமது கல்லூரி வணிகநிர்வாகவியல் துறை மாணவர்கள் 16 பேர் கலந்து கொண்டனர். இதில் Paper Presentation-ல் M.Shajith இரண்ாம் பரிசும், லட்சுமி பிரியா மற்றம் ரமாபிரியா ஆகியோர் மூன்றாம் பரிசும் பெற்றனர். Product Launch-ல் மனோஜ்குமார், பிரிவின்குமார், சத்தியபிரகாஷ், பாலமுருகன், மோகன் ஆகியோர் கலந்து கொண்டு இரண்டாம் பரிச பெற்றனர். Fashion show-ல் கார்த்திக், அஸ்வின்கார்த்திக், லிப்பேஷ், ஷஜித், நந்தகுமார், ரியாஸ் ஆகியோர் கலந்து கொண்டு மூன்றாம் பரிசு பெற்றனர். Business Quiz-ல் அருண்குமார், அஸ்வின்கார்த்திக், ஆகியோர் கலந்து கொண்டு இரண்டாம் பரிசு பெற்றனர். Group Dance-ல் வெங்கடேஷன், நந்தகுமார், ஆகியோர் கலந்து கொண்டு மூன்றாம் பரிசு பெற்றனர்.

நமது கல்லூரி வணிகநிர்வாகவியல்துறை ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை 5வது பாடவேளையில் மாணவர்களின் அறிவுக் கூர்மையை வெளிப்படுத்தும் வகையில் "Management Programme" நடத்தப்பட்டு வருகிறது.

18.06.2018 அன்று துறைத்தலைவர் விஜயலெட்சுமி அவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

## l. வணிகவியல் துறை (DEPARTMENT OF COMMERCE – SF)

10.09.2018 அன்று மாநில அளவிலான பயிலரங்கம் **"Research Colloquium in Social sciences"** என்ற தலைப்பில் நடைபெற்றது. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளனான மாணவர்களும், பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

15.10.2018 அன்று தேசிய அளவிலான கருத்தரங்கம் **"Recent innovatives in commerce, Economic and Management"** என்ற தலைப்பில் நடைபெற்றது. பல்வேறு கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் திரளாக கலந்து கொண்ட தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்பித்தனர்.

27.10.2018 அன்று எமது துறை மாணவர்களுக்கான "**The Institute of Cost Accountants of India"** என்ற கல்வி நிறுவனம் மூலம் **"CMA – Foundation Course-**க்கான துவக்க வகுப்பு விழா நடைபெற்றது.

எமது துறை முதலாமாண்டு மாணவர்கள் Mary Matha college, Fathima college போன்ற பல கல்லூரிகளில் நடைபெற்ற Inter-college meet-ல் கலந்து கொண்டு பரிசு மற்றும் சான்றிதழ்களை பெற்று வந்தனர்.

எமது துறை பேராசிரியர்கள் ஏனைய கல்லூரிகளில் நடைபெற்ற தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்களில் கலந் கொண்டு தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை சமர்பித்தனர்.

**m.கணினிப் பயன்பாட்டுத்துறை : (BCA & B.Sc (IT) Department)**

கடந்த 06.09.2018 அன்று எங்கள் துறையின் சார்பாக நடைபெற்ற **"GUEST LECTURE IN IMAGE PROCESSING"** எனும் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கின் மூலம் எங்கள் மாணவர்கள் மிகவும் பயன் பெற்றனர்.

கடந்த 28.09.2018 அன்று நடைபெற்ற **"APPLICATIONS OF IOT"** என்னும் கருத்தரங்கில் எங்கள் மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்,

கோவை NEHRU COLLEGE – ல் நடைபெற்ற **INTER COLLEGE MEET நிகழ்ச்சியில் எங்கள் துறை மூன்றாமாண்டு மாணவர்கள் பங்கேற்று III B.CA-யைச் சேந்த P.குணசேகரன் மற்றும் III B.Sc (IT) S.மகேந்திரன், Debugging போட்டியில் வெற்றி பெற்றனர்.**

பெரியகுளம், மேரி மாதா கல்லூரியில் நடைபெற்ற Inter Cllege Meet-ல் எங்கள் துறை மாணவர்கள் பங்கேற்று Debugging போட்டியில் II B.Sc (IT)-யைச் சேர்ந்த வினோத்குமார் மற்றும் Animation போட்டிலியல் II BCA-வைச் சேர்ந்த அழகேஷ்குமார் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

மதுரை KLN ENGINEERING College-ல் நடைபெற்ற Inter College Meet-ல் எங்களது தறை மாணவர்கள் 15 பேர்கள் பங்கேற்று வந்தனர்.

**n. ஆங்கிலத்துறை (DEPARTMENT OF English – SF)**

ஆங்கிலத்துறை (சுயநிதிப்பிரிவு) செப்டம்பர் 5, 2018 அன்று **Phoenix Literary Association** துவக்க விழா நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினர்களாக முனைவர். **கிறிஸ்டோபர், மேலூர் அரசு கலைக் கல்லூரி, மதுரை மற்றும் திரு.N.சுகுமாரன், முன்னாள் கல்லூரி பேராசிரியர்** ஏ.வி.ச.கல்லூரி ஆகியோர் பங்கு பெற்று சிறப்புரையாற்றினார்.

மேலும் ஆங்கிலத்துறை மாணவ, மாணவியர்கள் கொடைக்கானலில் உள்ள கிறித்தவ கல்லூரியில் நடைபெற்ற **" The mouse Trap"** எனும் நாடகத்தை காணச் சென்றனர்.

**o. இயற்பியல் துறை (SF)**

20.06.2018ஆம் தேதி அன்று இயற்பியல் துறையைச் சார்ந்த 17 மாணவர்களும் 1 பேராசிரியரும் பெரியகுளம் மேரிமாதா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ஒரு நாள் கருத்தரங்கில் பங்கேற்று சான்றிதழ்களை பெற்று வந்தனர்.

இயற்பியல் துறையின் சார்பாக 07.09.2018 அன்று **"Introduction of Solar cells – An overview"** என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் எமது துறையைச் சார்ந்த மாணவ, மாணவிகள் பங்கு பெற்று பயன் அடைந்தனர்.

பேராசிரியர் S.மரியஸ்டெபி அவர்கள் K.S.R கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சேங்கோடு-ல் 31.08.2018 மற்றும் 01.09.2018 நடைபெற்ற இரண்டு நாட்கள் உலகலாவிய கருத்தரங்கில் பங்கேற்று கட்டுரை வாசித்தார். மற்றும் காந்தி கிராம பல்கலைக்கழகம், திண்டுக்கல் -யில் நடைபெற்ற இரண்டு நாட்கள் (07.01.2019, 08.01.2019) உலகலாவிய கருத்தர்கில் பங்கேற்று கட்டுரை வாசித்தார்.

**p. வேதியியல்துறை (SF)**

திருமதி R.அருணாதேவி, உதவிப்பேராசிரியர் அவர்கள் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் வாயிலாக தனது முனைவர் பட்டத்தை 05.02.2019 அன்று பெற்றுள்ளார்.

முனைவர்.B.கவிதா, உதவிப்பேராசிரியர் அவர்கள் தனது ஆய்வுக் கட்டுரைகளை ஐந்து **International Peer reviewed – Journal**யில் வெளியிட்டுள்ளார்.

முனைவர்.R.அருணாதேவி, உதவிப்பேராசிரியர் அவர்கள் தனது ஆய்வுக் கட்டுரைகளை நான்கு International மற்றும் Elsiver Journalயில் வெளியிட்டுள்ளார்.

II M.Sc (Chemistry) மாணவிகள் பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரியில் ஜனவரி மாதம் நடைபெற்ற போட்டிகளினல் கலந்து கொண்டு பரிசினைப் பெற்று உள்ளனார்.

II M.Sc (Chemistry) மாணவ, மாணவிகள் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற **International Conference on Nanomedicien**-ல் கலந்து கொண்டு தங்களது ஆய்வின் முடிவுகளை முனைவர்.B.கவிதா மற்றும் முனைவர்.R.அருணாதேவி அவர்களின் வழிகாட்டுதலின்படி சமர்பித்துள்ளனார்.

முனைவர்.B.கவிதா, உதவிப்பேராசிரியர் அவர்கள் ஏப்ரல் 12, 13ல் மகாத்தமா காந்தி பல்கலைக்கழகம் கோட்டயம், கேரளாவில் நடைபெறவுள்ள **International Conference on Nanomaterials Fabrication of Visible – light active nanocomposites for degradation of organic pollution** என்ற தலைப்பில் சிறப்புரையற்றவுள்ளார்.

**q.கணிதவியல்துறை (SF)**

நமது கல்லூரியில் 2018 – 2019ஆம் கல்வி ஆண்டில் புதிதாக சுயநிதிப்பிரிவில் இளங்கலை கணிதவியல் பாடப்பிரிவு தொடங்கப்பட்டது. இத்துறையின் சார்பில் அக்டோபர் -3, 2018-ல் "**Optimization via Difeerenational Calculus**"என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. துறைத்தலைவர்.முனைவர்.சி.செல்வகுமார் அவர்கள் 21- 23.12.2018 வரை புது டெல்லியில் உள்ள டெல்லி பல்கலைக்கழகத்தில் கணிதவியல் துறையின் சார்பில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் பங்கேற்று **"Discrete Markov Decision Process – Inventory Control in a Service Facility System**" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையை சமர்பித்துள்ளார். மேலும் கல்லூரியின் சார்பில் 05.01.2019 நடைபெற்ற ஆசிரியர் மேம்பாட்டு திட்டத்தில் துறையில் உள்ள பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். **09.03.2019 அன்று துறைத்தலைவர் சி.செல்வக்குமார் அவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.**

**r.தாவரவியல்துறை (SF)**

நமது கல்லூரியில் 2018 – 2019ஆம் கல்வி ஆண்டில் புதிதாக சுயநிதிப்பிரிவில் இளங்கலை தாவரவியல் பாடப்பிரிவு தொடங்கப்பட்டது.இதில் சுமார் 30 மாணவ, மாணவியர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்..

**s.வரலாற்றுத்துறை (SF)**

**கள ஆய்வு கல்வி :**

02.08.2018ல் முதுகலை வரலாற்றுத் துறை மாணவ, மாணவிக்ள அனைவரும் கழுகுமலை வீரசிகாமணி – கீழடி போன்றி வரலாற்று இடங்களுக்கு கள ஆய்வு சென்று வந்தனா்.

20.02.2019 ல் பெரியகுளம் ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிா் கல்லூாயீல் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் துறை மாணவ, மாணவியா்களான, பவித்ரா, ராம்குமாா், நந்தகுமாா் ஆகியோா் தமது ஆய்வு கட்டுரைகளை வாசித்து அளித்தனா்.

**கண்டுபிடிப்புகள் :**

26.07.2018ல் போடி – பிச்சாங்கரைப் பகுதியல் 3000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கல்திட்டைகள் கள ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டு, அனைத்து செய்திகளும் தொலைக்காட்சிகள் மற்றும் செய்தி தாள்களில் வெளியிடப்பட்டது. இதில் முதல்வா், துறைபேராசிரியா்கள் மாணவ, மாணவியா்கள் கலந்து கொண்டனா்.

11.03.2019ல் தேனி மாவட்டம், கோம்பைக்கு அருகில் கி.பி 15ம், 16ம் நூற்றாண்டைச் சோ்ந்த வீரக்கல்லான யானைக் குத்திபட்டான் கல் ஒன்று மாணவ, மாணவியா்கள் மற்றும் முனைவா்.எம்.கனகராஜ் ஈடுபட்ட போது கண்டறியப்பட்ட செய்தி அனைத்து செய்திதாள்களிலும் வெளியிடப்பட்டது.

**பேராசியா் கலந்து கொண்ட செயல்பாடுகள்**

10.10.2018ல் திண்டுக்கல் - சித்தரேவு அருகிலுள்ள நெல்லூாில் 18ம் நூற்றாண்டை சோ்ந்த இரு நடுகற்கள் கண்டறியப்பட்டு செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டன

**வெளியான கட்டுரைகள் :**

ஜீலை 26 மற்றும் 27 2018ல் கமாராசா் கல்லூாி, தூத்துக்குடியில் வரலாற்றுத் துறையில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் **“Importnt Secondary and Higher Education Committees in Post Independence Period - A Glanee,** என்ற தலைப்பில் கட்டுரை வாசித்து வெளியிடப்பட்டுள்ளது.

21.12.2018ல் அரசு கலை கல்லூாி மேலூா், தமிழ்துறை சாா்பில் நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் **“Udayagiri Fort – A Historical view”** என்னும் தலைப்பில் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது

அக்டோபர் 2018ல் ‘‘நிலம்’’ என்ற பல்கலைகழக மானிய குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு இதழில் **“Dindigul Rock Fort – A Historical Glance”** என்னும் தலைப்பில் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

**கலந்து கொண்ட கருத்தரங்குகள் மற்றும் கருத்துப் பட்டறைகள்**

22 செப்படம்பர் 2018ல் பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி , முதுகலை வரலாற்றுத் துறை நடத்திய மாநில அளவிலான கருத்தரங்கில் பங்கு பெற்றார்.

18.11.2018ல் மதுரை கருத்துப் பட்டறை இயக்கம் நடத்திய தேசிய அளவிலான ஒரு நாள் கருத்தரக்கில் பங்கு கொண்டார்.

25.02.2019ல் ஆராய்ச்சி மற்றும் முதுகலை வராலாற்றுத்துறை, அரசுகலைக் கல்லூரி, மேலூரில் நடைபெற்ற பன்னாட்டு அளவிலான மாநாட்டில் பங்கு கொண்டார்.

**8. அரசு உதவித்தொகை:-**

நமது கல்லூரி இளங்கலை மற்றும் முதுகலை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு கீழ்கண்ட (அரசுத்துறைகளின் மூலம்) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, மாவட்ட ஆதி திராவிடர் நலத்துறை, மூலம் உதவித்தொகையாக ஏறத்தாழ **ரூ24,04,802/-** பெறப்பட்டு மொத்தம் **953** மாணவ மாணவியர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**9.கற்பிக்கப்படும் பாடங்களும் மாணவர்களின் எண்ணிக்கை :**

நமது கல்லூரியில் இளநிலைப் பட்டவகுப்பில் வரலாறு, பொருளியல், ஆங்கிலம், கணிதம், வேதியியல், கணினி மற்றும் வணிகவியல் (கணினி பயன்பாடு) பாடங்களும் முதுநிலையில் கணிதம், வேதியியல், ஆங்கிலம் மற்றும் வணிகவியல் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. வேதியியல்துறை, கணித்துறை, வணிகவியல்துறை, பல்கலைக்கழகத்தால் ஆராய்ச்சி மையமாக அங்கீகரிக்கப்பட்டு M.Phil., மற்றும், Ph.D., ஆய்வுப் பணிகள் நடந்தேறி வருகின்றன

சுயநிதிப்பிரிவின் கீழ் இளநிலைப் பட்ட வகுப்பில் B.C.A., B.Sc., (IT), B.B.A., B.Com (CA), B.A., English, B.Sc(Physics), B.Sc(Maths), B.Sc (Botany)

முதுநிலையில் M.Sc., CS, M.Sc., Chemistry, M.A., English,M.Com (CA), M.A (History) M.Phil., Chemistry, ,M.Phil., Maths, M.Phil.,Commerce, M.Phil, English, M.Phil, Computer Science Ph.D.,Maths, Ph.D.,Chemistry, Ph.D.,Commerce பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.

**அரசு உதவி பெறும் பிரிவுகளில் 1225 மாணவ, மாணவியர்களும் சுயநிதிப் பிரிவுகளில் 783 மாணவ, மாணவியர்களும் ஆக மொத்தம் 2008 பேர் பயிலுகின்றனர்.**

காந்தியச் சிந்தனை சான்றிதழுக்குரிய பாடமாகவும் (CGT) மற்றும் பட்டய பாடமாகவும் (DGT) கணினிப்பயன்பாடு இளநிலை (DCA) மற்றும் முதுநிலை (PGDCA) பட்டய பாடங்களாகவும் கற்பிக்கப் படுகின்றன.

வேதியியல் மற்றும் வணிகவியல் துறையில் சான்றிதழ் மற்றும் பட்டய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

**10. ஆசிரியர், அலுவலர்கள் எண்ணிக்கை:**

நம் கல்லூரியில் அரசு உதவி பெறும் பிரிவுகளில் **37** பேராசிரியர்களும், **18** அலுவலர்களும், சுயநிதிப்பிரிவில் **69** பேராசிரியர்களும், **43** அலுவலர்களும் பணிபுரிகின்றனர்.

இக்கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களும், 25 பேர் முனைவர் பட்டம் பெற்றவர்கள். மீதமுள்ள அனைவரும் M.Phil., படிப்பு முடித்து, Ph.D.,க்காக ஆய்வுப்பணியினை செய்து கொண்டு இருக்கிறார்கள். பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் இந்த ஆண்டு நடைபெற்ற தேசிய மற்றும் மாநில அளவிலான கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளனர்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வு வழிகாட்டிகள் ( **Recognized Research Guides by Madurai Kamarj University**)

| | | |
|---|---|---|
| வணிகவியல் துறை | - | Dr. S. பாலமுருகன், Ph.D., |
| | | Dr. A. சுஜாதா, Ph.D., |
| கணிதவியல் துறை | - | Dr.C. இளங்கோ, Ph.D., |
| ,, | | Dr.K. கிருஷ்ணன், Ph.D., |
| வேதியியல் துறை | - | Dr.G. ரவீந்திரன், Ph.D., |

| | |
|---|---|
| தாவரவியல் துறை | Dr. C. கோபி, Ph.D., |
| கணினி துறை | Dr. S. சிவக்குமார், Ph.D., |
| ஆங்கிலத் துறை | Dr. C. பழனிவேல்ராஜன் Ph.D., |
| | Dr. B. ஆனந்த பிரசாத், Ph.D., |
| | Dr. V. விமலா Ph.D., |

**11..கல்லூரித் தேர்வுகள்:**

உயர் கல்வியில் பின் தங்கியுள்ள நமது பகுதியைச் சார்ந்த மாணவர்களின் கல்வித்தரத்தினை உயர்த்த இக்கல்லூரி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. ஆசிரியர்களின் சீரிய முயற்சியினாலும் மாணவர்களின் கடின உழைப்பினாலும் இந்த கல்வியாண்டில் நடந்து முடிந்த பல்கலைக்கழக தேர்வுகளில் ஒரு சில பாடங்களைத் தவிர மற்ற அனைத்து பாடங்களிலும் 80 சதவீதத்திற்கு மேல் மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

நமது கல்லூரியில் **CBCS** என்றும் திட்டத்தின் அடிப்படையில் நடைபெறும் **உள்மதிப்பீடு தேர்வுகளின் ஒருங்கிணைப்பாளராக (Co-ordinator for InternalExams)தாவரவியல்துறை இணைபேராசிரியர் Dr.C.கோபி அவர்களும் Dr.G.ரவீந்திரன், வேதியியல்துறை இணைபேராசிரியர் அவர்களும் திறம்பட செயல்பட்டு வருகிறார்கள்.**

**12.மாணாக்கர் மேம்பாட்டுத்திட்டங்கள்:**

**a. காந்திய சிந்தனைக் கல்வி:**

இக்கல்வியாண்டில் காந்திய சிந்தனைச் சான்றிதழ் பட்டயப் பாடத்தில் வருடம் தவறாமல் மாணவ, மாணவியர்கள் தேர்வெழுதி வெற்றி பெற்று வருகின்றனர். இக்கல்வியாண்டிலும் 60 மாணவ, மாணவியர்கள் சான்றிதழ் மற்றும் 15 மாணவ, மாணவியர்கள் பட்டயப் படிப்பிற்கானத் தேர்வினை எழுதியுள்ளனர். காந்திய சிந்தனைப் பாடங்களில் கடந்த ஆண்டில் பல்கலைக்கழக தேர்வு எழுதிய அனைவரும் வெற்றி பெற்று தேறியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மையத்தின் **ஒருங்கிணைப்பாளராக தமிழ்த்துறையின் உதவிப்பேராசிரியை லெ.அலமேலு அவர்கள் பணியாற்றி வருகின்றார்.**

**b. நாட்டுநலப் பணித்திட்டம் : (N.S.S)**

21.06.2018 அன்று நமது கல்லூரியில் சர்வதேச யோகா தினம் நாட்டுநலப்பணித்திட்டம் சார்பாக கொண்டாடப்பட்டது. இதில் கல்லூரியின் தலைவர் திரு.S.V.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் முதல்வர் உட்பட 100 மாணவர்கள் பங்கு கொண்டனர்.

27.06.2018ல் போதை விழிப்புணர்வு ஊர்வலம் போடி கட்டபொம்மன் சிலையிலிருந்து பஸ் ஸ்டாண்ட வரை நடைபெற்றது. இதில் நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர்கள் 300 பேர் பங்கு பெற்றனர்.

26.07.2018 அன்று நமது கல்லூரியில் நாட்டு நலப்பணித் திட்ட முதலாம் ஆண்டு மாணவர்கள் சேர்ப்பதற்கான முகாம் நடத்தப்பட்டது.

23.07.2018 அன்று போடி நகராட்சி கமிஷனர் தலைமையில் நமது கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட மாணவ, மாணவியர்கள் 150 பேர் பிளாஸ்டிக் உபயோகப்டுத்துவதின் விளைவு பற்றிய விழிப்புணர்வு ஊர்வலம் போடியில் நடைபெற்றது. கல்லூரியின் தலைவர் உயர்திரு.S.V.சுப்பிரமணியன அவர்கள் தொடங்கி வைத்தார்.

24.08.2018ல் கேரளா வெள்ள நிவாரண நிதிக்காக நமது கல்லூரி நாட்டு நலப்பணித்திடட மாணவ, மாணவியர்கள் இணைந்து கல்லூரியில் ரூ.16,000/- திரட்டி அனுப்பி வைக்கப்பட்டது.

06.09.2018 அன்று நமது கல்லூரியில் தலை கவசம் அணிவதின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நாட்டு நலப்பணித்திட்டம் சார்பாக நடைபெற்றது. இதற்கு போடி நகர் காவல் ஆய்வாளர் மற்றும் சார்பு ஆய்வாளர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்

23,24.07.2018 ஆகிய தேதிகளில் நமது கல்லூரியின் சார்பாக தத்தெடுத்துள்ள குரங்கனி, கொட்டகுடி, கிராமங்களில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் தூய்மையின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது. இதில் 350 நாட்டுநலப்பணித்திட்ட மாண, மாணவியர்கள் பங்கு கொண்டனர்.

28.09.2018 அன்று தேனி மருத்துவக் கல்லூரியும் நமது கல்லூரியும் இணைந்து நாட்டு நலப்பணித்திட்டம் சார்பாக இரத்த தான முகாம் நடத்தப்பட்டது. இதில் 150 மாணவர்களிடமிருந்து இரத்தம் தானமாக பெறப்பட்டது.

08.10.2018 அன்று நமது கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டம் சா்பாக வாக்காளா் விழிப்புணா்வு முகாம் நடத்தப்பட்டது. இதில் வட்டாச்சியா் திருமதி.ஆா்த்தி அவா்கள் பங்கேற்று சிறப்புரை ஆற்றினாா்.

08.02.2019 முதல் 13.02.2019 வரை பெண்கள் அணி சாா்பாக நம் கல்லூரி த்ததெடுத்துள்ள மலைக் கிராமங்களான குரங்கனி, நரிப்பட்டி, முதுவாா்குடி ஆகிய கிராமங்களில் 7 நாள் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது.

08.02.2019 முதல் 13.02.2019 வரை ஆடவா் நாட்டு நலப்பணித்திட்ட அணி சாா்பாக முந்தல், சோலையூா், கொட்டக்குடி கிராமங்களில் 7 நாள் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் நடத்தப்பட்டது.

### 13. ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி கழகம்:

நமது கல்லூரியில் 25.01.2019 அன்று ‘‘ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி கழகம்’’ சாா்பாக கீலா் பாஸ்கா் அவா்களின் சிறப்பு நிகழ்ச்சி நடந்தது. இந்நிகழ்ச்சி மாணவ, மாணவியா்களுக்கும், பேராசிரிய பெருமக்களுக்கும் மிகவும் உதவியாக இருந்தது. இந்நிகழ்வு ஏற்பாடுகளை **‘‘ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி கழக’’ ஒருங்கிணைப்பாளா் இணைப்பேராசிரியா் முனைவா்.அ.மகேஸ்வரன் அவா்கள் செய்திருந்தாா்.**

### 14. மனித உரிமைகள் கழகம் : (Human Rights)

மனித உரிமைகள் கழகத்தின் ஒருங்கிணைப்பாளராக **முனைவா்.T.ராமலெட்சுமி** உதவிப்பேராசிரியா், வணிகவியல்துறை ஏ.வி.ச.கல்லூரி அவா்கள் இந்த ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறாா்.

### 15. நுகா்வோா் மன்றம் :

நுகா்வோா் மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக **திரு.V.கிருஷ்ணகுமாா்,** உதவிப்பேராசிரியா், வணிகவியல்துறை, ஏ.வி.ச.கல்லூரி அவா்கள் இந்த ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறாா். இதில் சுமாா் **30** மாணவா்களை புதிய உறுப்பினா்களாக சோ்ந்து செயல்பட்டு கொண்டு வருகிறது.

### 16. Equal Opportunity Cell

நமது கல்லூரி பல்கலைக்கழக மானியக்குழு ஒப்புதலுடன் Equal Opportunity Cell இயங்கி வருகிறது. இதனுடயை ஒருங்கிணைப்பாளராக **முனைவா்.T.அன்பழகன்.** பொருளியியல்துறை, துறைத்தலைவா் அவா்கள் இருந்து வருகிறாா். இதனுடைய பணிகளை அவ்வப்பொழுது மாணவா்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருகிறது.

**17. இளைஞர் நலத்துறை - மதநல்லிணக்க விழாக்கள் :**

**இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் (YRC)**

இச்சங்கத்தின் ஒருங்கிணைப்பாளராக கணிதத்துறை உதவிப்பேராசிரியர் **Dr.V.ஹேமலதா.** அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

**18.Red Ribbon Club (RRC)**

நமது கல்லூரியில் 20.09.2018 ஆம் நாள் LIONS CLUB, RED RIBBON CLUB மற்றும் தேனி அரசு மருத்துவமனை இணைந்து நடத்தப்பட்ட இரத்த தான முகாமில் சுமார் 1226 மாணவர்களைக் கொண்ட RED RIBBON ClUB-ல் உள்ள 102 மாணவர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தார்கள். இதில் முனைவர் T.இராஜகுமாரன் அவர்களும், கணித பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் ஆர்.பாண்டி அவர்களும் மற்றும் ஒருங்கிணைப்பாளர் Dr.V.ஹேமலதா அவர்களும், கல்லூரி பேராசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு இந்த இரத்த தான முகாமை சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

**19 .மகளிர் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் மையம்**

மகளிர் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் மையமத்தின் முக்கிய குறிக்கோள் வேலை தேடுபவராய் இருப்பதைவிட வேலை கொடுப்பவராய் இரு'' இக்கல்லூரி மாணவ, மாணவியர்களை தொழில் வல்லுனர்களாக உருவாக்குவதே இம்மையத்தின் முக்கிய குறிக்கோளாகும். நமது கல்லூரியில் இம்மையத்தில் 200 மாணவ, மாணவியர் உறுப்பினராக உள்ளனர். இந்த வருடம் முதலாமாண்டு மாணவர்களுக்காணன துவக்க விழா 25-09-2019 அன்று மிகச்சிறப்பாக நடத்தப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக **மோனார்க் இண்டஸ்டிரியல் புராடக்ட்ஸ நிறுவன மேலாண்மை இயக்குனர் ரமேஷ்கண்ணையன் தேனி மேலப்பேட்டை இந்து நாடார் உறவின்முறை பொது செயலாளர் திரு. ராஜ்மோகன் அவர்கள் தொழில முனைவோருக்கான விழிப்புணர்வு குறித்து விளக்கினார்.** அன்று மதியம் மாணவ, மாணவியருக்கு சலவைத்துாள், கிளீனிங் லிக்குட் ஆகியவை செய்வது எப்படி என்பது விளக்கப்பட்டது.

அதற்காக இம்மைய உறுப்பினர்களுக்கு தொழில்முனைவோர் விழிப்புணர்வுப் பயிற்சி, தொழில் பயிற்சி, திட்ட அறிக்கைத் தயாரிப்புப் போன்ற பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மற்ற எந்த கல்லூரியிலும் இல்லாத ''மாணவர் தொழில் முனைவோர் சுய உதவிக்குழுக்கள்'' நம் கல்லூரியில் உருவாக்கப்பட்டுள்ளது. இக் குழுக்கள் வாரந்தோறும் ஒருத் தொகையைச் சேமித்து வைக்கின்றனர்

**20.மகளிர் மையம்**

பாரம்பரிய மிக்க ஏல விவசாயிகள் சங்க கல்லூரியின் பெருமைமிகு மகளிர் மையத்தின் சார்பாக இந்த கல்வியாண்டில் 2018 – 2019 பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன அவற்றின் விவரங்கள் பின்வருமாறு

"மகளிர் மையத்தின்" இந்த ஆண்டிற்கான தொடக்க விழாவானது 28.08.2018 அன்று கல்லூரி தலைவர் திரு.S.V.சுப்ரமணியன் அவர்கள் தலைமையில் , முதல்வர் முனைவர்.T.இராஜகுமாரன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவில் N.S.கல்லூரியின் முதல்வர் **திருமதி.சித்ரா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

04.09.2018 அன்று கல்லூரியில் உள்ள அனைத்து மாணவிகளுக்கும் வாழ்வியல் நெறி குறித்த விழிப்புணர்வு பற்றி மகளிர் மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் வு.இராமலட்சுமி அவர்கள் சிறப்புரையாற்றினார்.

**"பெண்கள் உரிமை"** குறித்து 25.10.2018 அன்று கல்லூரியின் மகளிர் மையத்தின் சார்பாக விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த விழாவில் **"VISION – 2020"** தலைவரும், அப்துல்கலாமின் தனிசெயலாளருமான **திரு.செந்தூரன் அவர்களும், நீதிபதி. செங்கமலசெல்வன்** அவர்களும் பங்கேற்றனர். இவ்விழாவில் பெண்களுக்கான சட்டங்கள், உரிமைகள் பற்றி சிறப்பாக எடுத்துரைத்தனர்.

**21. நவராத்திரி விழா :**

நமது கல்லூரியில் நவராத்திரி விழா 10.10.2018 முதல் 19.10.2018 வரை நவராத்திரி விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. **இவ்விழாவினை** கல்லூரி **உபதலைவர்.திரு.P.V.கருப்பையா, கல்லூரியின் செயலர் திரு.S.ராமநாதன்** அவர்கள் தொடங்கி வைத்து சிறப்பித்தனர்.. கல்லூரி முதல்வர் மற்றும் கல்லூரியின் ஆட்சிக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

**22. கிறிஸ்துமஸ் பண்டிகை மற்றும் புத்தாண்டு விழா**

நமது கல்லூரியில் கிறிஸ்துமஸ் பண்டிகை மற்றும் புத்தாண்டு விழா 21.12.2018 அன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. **இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக போடிநாயக்கனூர் "புனித ஆரோக்கிய அன்னை தேவலாயத்தின் Fr.S.செபாஸ்டின் சின்னதுரை அவர்கள் கலந்து கொண்டு ஏசுகிறிஸ்து பற்றியும், "புத்தாண்டு வாழ்த்து" செய்தியும் கூறினார்.** அவ்விழாவிற்கு கல்லூரி

**தலைவர்.திரு.S.V.சுப்ரமணியன்** அவர்கள் தலைமை தாங்கி கேக் வெட்டி மாணவ மாணவியர்களுக்கு வழங்கினார். மேலும் கல்லூரியின் ஆட்சிக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர். மகளிர் மைய ஒருங்கிணைப்பாளர் வணிகவியல்துறை பேராசிரியை முனைவர்.T.ராமலட்சுமி அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

**23. தைப்பொங்கல் சங்கமம்**

நமது கல்லூரியில் கடந்த **11.01.2019ம்** தேதியில் தைப்பொங்கல் சங்கமம் கல்லூரி தலைவர் திரு.S.V.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தைப்பொங்கலை முன்னிட்டு நடைபெற்ற இவ்விழாவில் கல்லூரி வளாகத்தில் கோலப்போட்டி, தேவராட்டம், சிலம்பாட்டம், ஒயிலாட்டம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும் அனைத்துத் துறை மாணவிகளும் தனித்தனியாக மொத்தம் **52** பொங்கல் வைத்து கொண்டாடி மகிழ்ந்தனர். இதன் ஒருங்கிணைப்பாளராக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர்.திரு.மலைச்சாமி அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

**24.மகளிர் தினம் :**

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு மார்ச் - 8 அன்று நமது கல்லூரியன் மகளிர் மையத்தின் சார்பாக மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் வணிகவியல்துறை உதவிப்பேராசிரியை முனைவர்.ராமலட்சுமி அவர்கள் வரவேற்பரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக **"புதுக்கோட்டை பைந்தமிழ் செல்வி பாரதி"** அவர்கள் கலந்து கொண்டு சிறப்பரை ஆற்றினார்.

மேலும் நமது கல்லூரி தலைவரின் துணைவியார் திருமதி.அம்பிகாவதி சுப்ரமணியன் அவர்களும், கல்லூரி செயலாளர் துணைவியார். திருமதி வீரலட்சுமி ராமநாதன் அவர்களளும் மற்றும் திருமதி ஹேமலதா ஞானவேல் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழாவை சறிப்பித்து சிறப்புரை ஆற்றினர். இவ்விழாவின் முக்கிய நிகழ்வாக கல்லூரி வரலாற்றில் முதல் முறையாக மகளிர் மையத்திற்கான பிரதேதியோக **சின்னம் (லோகோ)** அறிமுகம் செய்யப்பட்டது.

மகளிர் மையத்தின் சார்பாக இந்தக கல்வியாண்டுக்குரிய அனைத்து விழாக்களும் சீரிய முறையில் சிறப்பாக நடைபெற கல்லூரி நிர்வகமும், முதல்வரும் அனைத்து தரப்பினரும் உதவி வழங்கியதற்கு மகளிர் மையத்தின் சார்பாக மனமார்ந்த நன்றீயை தெரிவித்துக் கொள்கிறோம்.

**25.மருத்துவ முகாம்**

09.03.2019 அன்று போடிநாயக்கனூர் ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி, மதுரை வேலம்மாள் மருத்துவமனை மற்றும் போடி RICH அரிமா சங்கம் இணைந்து நடத்திய மாபெரும் இலவச ஒரு நாள் சிறப்பு மருத்துவ முகாம் ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரியில் நடைபெற்றது. இம்முகாமிற்கான ஏற்பாடுகளை லயன்ஸ் கிளப் தலைவர் சு.கந்தசாமி, செயலாளர் Er.R.சக்திவேல், பொருளாளர் S.P.இராஜேந்திரன், சுஜி.சுகாதார பராமரிப்பு மைய நிர்வாக இயக்குநர் T.முருகேசன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். இம்மருத்துவ முகாமில் 10 பேர் கொண்ட பொதுமருத்துவம், இருதய மருத்துவம், எலும்பியல் மருத்துவம், மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவம், கண்சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை சிகிச்சை என பல்வேறு பயனுள்ள பரிசோதனைப் பிரிவுகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்நிகழ்வு கல்லூரி நிர்வாகக்குழு, முதல்வர் முனைவர்.வு.இராஜகுமாரன் அவர்களின் ஒத்துழைப்புடன் செயல்பட்டது.

இம்மருத்துவ முகாமிற்கான ஒருங்கிணைப்பாளர்களாக பேராசிரியர்கள்.S.பூங்குன்றன், R.பாண்டி, S.சிவக்குமார் ஆகியோர்கள் நியமிக்கப்பட்டு கல்லூரி பேராசிரியர்கள் மாணவ, மாணவியர்கள், அலுவலர்கள் அனைவரும் தங்களுக்கான பரிசோதனைகளை செய்து பயன் அடைந்தனர்.

**26.உன்னத் பாரத் அபியான்**

மத்திய மனிதவள மேம்பாட்டுத் அமைச்சகத்தின் உன்னத் பாரத் அபியான் (Unnat Bharat Abhiyan – UBA) திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மூலம் கிராமப்புற ஒட்டு மொத்த சமூகங்களில் விழிப்புணர்வு மற்றும் வளர்ச்சியைக் இந்த திட்டம் மூலம் செயல்படுத்தப்படும்.

இந்த திட்டத்தின் கீழ் நமது ஏல விவசாயிகள் சங்க கல்லூரி 2018 – 2019 தொழில்நுட்பம் அல்வாத பங்குபெறும் கல்வி நிறுவனமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. நமது கல்லூரியின் உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக நமது கல்லூரியின் தாவரவியல்துறை பேராசிரியர் முனைவர்.சி.கோபி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். அவர்களுக்கு உதவியாக சுயநிதிப்பிரிவு தாவரவியல் துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.ஏ.மோகன்ராஜ் மற்றும் ஆய்வுக்கூட உதவியாளர் திரு.எம்.ராஜராத்தினம் செயல்பட்டு வருகிறார்கள்.

**இத்திட்டத்தின் கீழ் நமது கல்லூரியின் அருகிலுள்ள மிகவும் பின்தங்கிய கிராமங்களாக கொட்டக்குடி, குரங்கனி, முந்தல், கரட்டுப்பட்டி, சோலாயூர் மற்றும முதுவாக்கடி கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளது.**

**UBA – 2.0 திட்டத்தின் கீழ் பங்கு பெறும் கல்வி நிறுவனங்களுகு ஆரம்ப பணிகளுக்காக முதல் கட்டமாக ரூபாய் ஐம்பது ஆயிரம் வழங்கியுள்ளது.**

இந்த திட்டத்தின் கீழ் கிராமப்புற மேம்பாட்டிற்காக குறைந்த செலவில் வருமானத்தை ஈட்டக் கூடிய தொழில்நுட்பத்தை (கல்வி/ சுகாதாரம்/வீடுகள்/உயிரிசக்தி/ இயற்கை விவசாயம், ஸ்வாஷ் பாரத் அபியான், குடிநீர், காடு வளர்ப்பு, திறன் வளர்ச்சி, டிஜிட்டல் கல்வியறிவு / மின் கிராம பஞ்சாயத்து ஆகியவற்றின் மூலமாக) வழங்கும் விதமாக அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும் அறிவியல் ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் கொடுப்பதன் மூலமாக அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்ற ஒரு உன்னத நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது இந்த உன்னத பாரத் அபியான்திட்டமாகும்.

சி.பி.ஏ கல்லூரி நிர்வாகம் மற்றும் முதல்வர் முனைவர்.T.ராஜகுமாரன் ஆகியோரின் வழிகாட்டுதலின் படி உன்னத் பாரத் அபியான் ஒருங்கிணைப்பாளர் முனைவர்.சி.கோபி, கல்லூரியின் நாட்ட நலப்பணித் திட்டத்தின் அலுவலர்கள் (NSS–Programmeofficer) முனைவர்.சி.மாணிக்கராஜ் முனைவர்.எஸ்.செந்தில்குமார், முனைவர்.சி.பழனிவேல்ராஜன், முனைவர்.வி.ஹேமலதா, முனைவர்.அ.சுஜாதா, முனைவர்.வி.விமலா, தேசிய மாணவர் படை அலுவலர் முனைவர்.கே.சிவா, கல்லூரியின் பேராசிரியர்களையும், தன்னார்வத் தொண்டர்கள் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதன் மூலமாக தத்தெடுக்கப்பட்ட கிராமத்தி அபிவிருத்திக்காக ஆலோசனை நடத்தினார்கள். இவர்களுடன் நமது கல்லூரியின் மாணவ, மாணவியர்கள் ஒருங்கிணைந்து தீவிரமாக செயல்பட்ட அறிக்கைகள் பின்வருமாறு

ஜீலை 23, 24, 2018 ஆம் தேதியில் கொட்டகுடி, குரங்கனி கிராமத்தில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர்.கோபி மற்றும் உதவிப்பேராசிரியர் முனைவர்.மோகன்ராஜ், ஆய்வுக்கூட உதவியாளர் திரு.ராஜரத்தினம் ஆகியோரின் மேற்பார்வையில் கிராமம் மற்றும் கிராமத்தில் குடியிருப்போரின் கணக்கெடுப்பு மற்றும் தகவல் சேகரிப்பு பணியினை நமது ருடீயு தன்னார்வ மாணவர்கள் செய்தனர். அதன் அடிப்படையில் கிராமத்தின் விபரங்களையும், கிராமத்தில் வாழும்

கிராமவாசிகளின் விவரங்களையும் தாங்கள் கொண்டு சென்ற படிவத்தில் அனைத்து தகவல்களையும் பூர்த்தி செய்து சேகரித்து சமர்ப்பித்தனர்.

18.09.2018 அன்று கொட்டக்குடி மற்றும் குரங்கனி கிராமங்களுக்கு 71 மாணவ, மாணவியர்களுடன் பேராசிரியர்கள் முனைவர்.சி.கோபி, முனைவர்.எஸ்.செந்தில்குமார் மற்றும் முனைவர்.ஏ.மோகன்ராஜ் தலைமையில் விழிப்புணர்வு பேரணி மற்றும் தூய்மை பணியினை செய்தனர்.

நமது தேசத்தின் சுதந்திர தினமான ஆகஸ்ட் 15, 2018 அன்று நமது கல்லூரியன் தலைவர் திரு.S.V.சுப்ரமணியன், உப-தலைவர் திரு.P.V.கருப்பையா, செயலாளர் திரு.S.இராமநாதன், மற்றும் முதல்வர் முனைவர்.T.ராஜகுமாரன், ஒருங்கிணைப்பாளர் சி.கோபி, நாட்டு நலப்பணித்திட்டத்தின் அலுவலர்கள், பேராசிரியர்கள் மாணவ, மாணவியர்கள் முன்னிலையில் கல்லூரியின் உன்னத் பாரத் அபியான்திட்ட்தின் தகவல் பலகையைத் திறந்து இத்திட்டத்தின் முறையாக துவக்கி வைத்தார். உன்னத் பாரத் அபியான் செயல் திட்டத்தினை விரிவாக சுதந்திரநாள் அறிக்கையில் வாசித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நமது தேசத்தின் சுதந்திர தினமான ஆகஸ்ட் 15, 2018 அன்று கொட்டக்குடி பஞ்சாயத்து சார்பாக குரங்கணியில் கிராம சபை பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு நமது கல்லூரி முதல்வர் முனைவர்.T.இராஜகுமாரன் தலைமை வகித்தார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் கோபி திட்டத்தின் விளக்கங்களை விவரித்தார். இந்த கிராம சபா கூட்டத்தில் மாவடட நிர்வாகத்தின் ஆலோசனையின் பேரில் கொட்டகுடி பஞ்சாயத்து துணை **block development officer திரு.தர்மராஜமாணிக்கர் வரவேற்புரை நிகழ்த்தினார்**. கொட்டக்குடி பஞ்சாயத்து செயலாளர் திரு.திருப்பதி நன்றி உரை ஆற்றினர். சுமார் 25 கிராம பொது மக்கள் கலந்து கொண்டு இந்த கூட்டத்தின் வாயிலாக பல்வேறு விஷயங்களை எடுத்துரைத்தனர். இந்த கிராம சபைக் கூட்டத்தில் நமது கல்லூரியின் பேராசிரியர்கள் முனைவர்,சிவக்குமார், முனைவர்.பாலமுருகன், முனைவர்.கிருஷ்ணன், முனைவர்.ராஜ்மோகன், முனைவர்.மாணிக்கராஜ், முனைவர்.செந்தில்குமார், முனைவர்.சிவா, முனைவர்,மோகன்ராஜ் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

வருமானத்திற்கான விவசாயம் தொழில்நுட்பம் போன்றவைகளை அவர்கள் எழுத்துக் கூறினார்கள். மேலும் அவர்களின் மகன் மகள்களுக்கு வேண்டிய தொழில் நுட்ப அறிவுரைகள் மற்றும் தொழில் நுட்பங்களை வழங்குவதன் மூலம் அவர்களின் நிரந்தர வருமானத்திற்கு வகை செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

மண்புழு உரம் தயாரித்தல், காளான் சாகுபடி, உயிர் உரம் தயாரித்தல், விதைப்பந்து தயாரித்தல், காட்டுமரம் வளர்ப்பு ஊக்கிவித்தல், நர்சரி செடி வளர்ப்பு முறையினை ஊள்குவித்தல், தூய்மை பணி விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார். கிராமப்புறத்தில் உள்ள பள்ளிகளின் சுற்று தூய்மை செய்தல் பிளாஸ்டிக்கை உபயோகத்தினால் ஏற்படும் தீமைகள் சுற்றுச்சூழலின் பாதிப்புகள் போன்றவைகளை அக்கிராம மக்களுக்கு எமது மாணவர்கள் எடுத்துரைத்தனர்.

சென்னை ஐ.ஐ.டியில் 06.08.2018 அன்று முனைவர்.சி.கோபி மற்றும் முனைவர்.சி.மாணிக்கராஜ் அவர்கள் உன்னத் பரத் அபியனின் (Unnat Bharat Abiiyan) **"செயல்பாட்டு திட்டமிடல் பட்டறை"**யில் பங்கேற்றனர்.

நமது தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் 150வது பிறந்த ஆண்டை கொண்டாடும் விதமாக சி.பி.ஏ கல்லூரியின் NSS, உன்னத பாரத் அபியான், போடி பெஸ்ட் லயன் சங்கம், தேனி அரசு மருத்துவக் கல்லூரி டொம்புச்சேரி ஆரம்ப சுகாதார மையம் இணைந்து சி.பி.ஏ.கல்லூரியில் 20.09.2018 இரத்ததான முகாம் நடைபெற்றது. இந்த ரத்ததான முகாமை நமது கல்லூரி முதல்வர் முனைவர்.T.இராஜகுமாரன் அவர்கள் துவக்கி வைத்தார். மேலும் பேராசிரியர்கள் பூங்குன்றன், அன்பழகன், கோபி மாணிக்கராஜ், செந்தில்குமார், பழனிவேல்ராஜன், ஹேமலதா, சுஜாதா, விமா, தேனி மருத்துவக் கல்லூரி ரத்த வங்கி அதிகாரி குழுவினர் மற்றும் பலர் பங்கு கொண்டனர். இதில் சுமார் 125 யூனிட் ரத்தம் மாணவர்களிடம் இருந்து பெறப்பட்டு தேனி அரசு மருத்துவக் கல்லூரி ரத்த வங்கிக்கு அளிக்கப்பட்டது.

**27. பகவடிவதை தடுப்பு சட்டம் : (Anti Ragging Cell)**

இம்மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக இயற்பியல்துறை உதவிப்பேராசிரியர் திரு.G.ராஜ்மோகன் அவர்கள் செயல்பட்டு வருகிறார். இதன் உறுப்பினர்களாக உடற்கல்வி இயக்குநர் முனைவர்.K.சிவா, உதவிப்பேராசிரியர் திருமதி.A.சுபலட்சுமி அவர்களும் மாணவ உறுப்பினர்களாக மூன்றாமாண்டு வரலாறு M.கோபிநாத், மூன்றாமாண்டு வணிகவியல் G.கார்த்திகேயன் மற்றும் மூன்றாமாண்டு கணிதவியல் P.லாவண்யா ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

பேராசிரியர் G.ராஜ்மோகன் அவர்கள் 27.08.2018 அன்று பகடிவதை தடுப்பு குறித்த கூட்டம் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார்.

பகடிவதை புகார் எண்கள் 1027, 1098 மற்றும் 18001805522 இணையதள முகவரி போன்ற விபரங்களை மாணவர்களுக்கு தெரியும் வண்ணம் அறிவிப்பு

பலகைகள் வைக்கப்பட்டுள்ளது. அரசு மனநல மருத்துவர்கள் அறிமுகம் செய்யப்பட்டு அவர்களின் தொலைபேசி எண்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. மாணவர்கள் ஒழுங்கு நடவடிக்கைகளை கண்காணிப்பு கேமரா மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**28. தேசிய மாணவர் படை: (NCC)**

நமது கல்லூரி மாணவர்கள் 03.08.2018 முதல் 12.08.2018 வரை **CATC Camp** பழனியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை முகாமில் 12 பேர் கலந்து கொண்டனர்

நமது கல்லூரி 5 தேசிய மாணவர் படை மாணவர்கள் 31.08.2018 முதல் 09.09.2018 வரை G.T.N.கலைக்கல்லூரியில் நடைபெற்ற குடியரசு தின விழா பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்

நமது கல்லூரி தேசிய மாணவர் படை மாணவிகள் இருவர் 03.09.2018, 04.09.2018 அன்று திருச்சி தேசிய மாணவர் படை தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டனர்.

நமது கல்லூரி தேசிய மாணவர் படை மாணவி S.சுஹாசினி, II B.A (English) திருச்சியில் நடைபெற்ற குடியரசு தின பயிற்சி முகாமிலும், சத்திய மங்கலததில், பண்ணாரி அம்மன் தொழில் நுட்ப கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி முகாமிலும் கலந்து கொண்டு நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்தள்ளார்.

நமது கல்லூரி தேசிய மாணவர் படை மாணவி T.சுதாலட்சுமி, III B.A (English) சென்னையில் மெரினா கடற்கரையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் சார்பாக நடைபெற்ற குடியரசு தினவிழாவில் பங்கு பெற்று, நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்தள்ளார்.

நமது கல்லூரி தேசிய மாணவர் படைப்பபிரிவு இந்த ஆண்டு நமது கல்லூரியில் CATC-Camp ஐ சிறப்பாக நவம்பர் 23.11.2018 முதல் 02.12.2018 வரை சிறப்பாக நடத்தியது. இதில் திண்டுக்கல், தேனி, கருமாத்தூர், திருவேடகம், உத்தமபாளையம் ஆகிய கல்லூரிகளைச் சேர்ந்த 250 மாணவ, மாணவிகள் மற்றும் திண்டுக்கல், ஆயக்குடி, ஒட்டன்சத்திரம், பழனி, உடுமலைப்பேட்டை, போடி, வத்தலக்குண்டு, பெரியகுளம் ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த 250 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

**அகில இந்திய Army Attachment Camp செக்கந்திராபாத்தில் நடைபெற்றது. இதில் மாரியப்பன் III B.A (Economics) சந்தோஷ் III B.A (History) ஆகிய இரு மாணவர்க்ள கலந்து கொண்டு நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.**

**அகில இந்திய மலையேற்றப் பயிற்சி முகாம் ஒடிசா மாநிலம் பூரியில் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியைச் சேர்ந்த மாரியப்பன் III B.B.A தனபாண்டி III B.A (English SF) ஆகிய இரு மாணவர்க்ள கலந்து கொண்டு நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.**

**அகில இந்திய அளவிலான தேசிய ஒருமைப்பாட்டு முகாம் (ஜேஊ) ஊயஅி மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியைச் சேர்ந்த மாசாணம் III B.A (History) என்ற மாணவர் கலந்து கொண்டு நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.**

**29. நுண்கலை மன்றம்**

ஏலம் மணக்கும் போடிநாயக்கனூரில் கல்விகென சிறப்பிடம் பெற்ற ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரியில் இயங்கி வரும் காத்திருக்காத காலத்தையும் கூட தனக்கு சாதகமாக்கி சாதனை புரிந்திட்ட நுண்கலை மன்றத்தின் 2018 – 2019 ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கை

தன்னம்பிக்கையை தனது தாராக மந்திரமாய் கொண்ட இக்கல்லூரி வரலாற்றிக்கே சிறப்பு சேர்க்கும் வகையில் தளராத இதயம் கொண்டு மன்றப் பொறுப்பாளர்களின் ஒத்துழைப்புடன் இவ்வாண்டு நுண்கலை மன்றக்குழு பங்கு பெற்ற அனைத்து போட்டிகளிலும் வெற்றி கனியைப் புசித்ததுடனும் இரண்டு சுழற்கோப்பைகளையும் வென்று பெருமை சேர்த்தது.

இம்மன்றத்தின் ஒருங்கிணைப்பாளராக தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை வே.மீனா அவர்களும் மன்றப் பொறுப்பாளர்களாக பேராசிரியர்கள் C.பழனிவேல்ராஜன், T.ராமலெட்சுமி சுயநிதிப்பிரிவு பேராசிரியர்கள் J.தேவர் பொம்மி நாயக்கர், N.பால்பாண்டி, P.ஜெகதீசன், N.சுபத்ராதேவி, S.காஞ்சனாதேவி, M.அன்புச்செல்வி ஆகியோர் சிறப்பாக செயல்பட்டு வந்துள்ளனர்.

இம்மன்றத்தின் முதல் நிகழ்வாக, மதுரை மங்கையர்க்கரசி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 20.09.2018 அன்று நடைபெற்ற ‘‘**முத்தமிழ்சாரல் விழாவில்’’ பங்கு பெற்று முதலிடத்தை பெற்று கல்லூரிக்கான வெற்றி கேடயத்தையும் வென்றது**.

உலக மனநல நாளை முன்னிட்டு 10.10.2018 அன்று **மதர் பவுண்டேசன்** அறக்கட்டளை சார்பாக ஆண்டிப்பட்டியில் நடைபெற்ற பல்வேறு கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு இடையேயான போட்டியில் நமது கல்லூரி முதலாமாண்டு வணிகவியல் துறை மாணவி **N.ஸ்ரீமதி ஆங்கில பேச்சு போட்டியில் முதலிடத்தை வென்றதுடன் ரூ.300/-பரிசுத்தொகையும் பெற்றார்.**

தேனி மாவட்டம் காவல்துறை சார்பில் அக்டோபர் 20ஆம் தேதி எஸ்.பி.அலுவலகத்தில் **"இண்டியன் போலீன் இன் சர்வீஸ் ஆப் தி நேசன்"** என்ற தலைப்பின் கீழ் தேனி மாவட்ட அளவில் நடத்தப்பட்ட வினாடி-வினா போட்டியில் நுண்லை மன்ற மாணவ, மாணவியர்கள் M.கோபிநாத், விக்னேஷ்வரன், **M.முத்துகருப்பையா, P.முத்துலெட்சுமி, யாழினி, சௌமியா ஆகியோர் கலந்து கொண்டு முதலிடத்தையும் பரிசுத்தொகை ரூ.3000/- வென்று வந்தனர்.**

ஜே.சி.ஐ.தேனி ஹனிப் மற்றும் தேனி சென்ட்ரல் ஜெம்ஸ் ரோட்டரி சங்கம் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான கல்லூரி மாணவர்களுக்கான கலை இலக்கிய போட்டியில் 09.01.2019 அன்று நமது கல்லூரி மாணவர்கள் T.சூரிய பிரகாஷ் (முதுகலை கணிதம்) நடனத்தில் K.முத்துபாண்டி (இரண்டாமாண்டு வேதியியல்) இரண்டாமிடத்தையும் ரங்கோலியில் முதலிடத்தையும் வென்றதுடன் பரிசுக் கூப்பன்களையும் பெற்றனர்.

08.02.2019 அன்று தேனி மாவட்டம் ஆண்டிபட்டி பாரத் நிக்கேத்தன் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கல்லூரி கலை போட்டியில் நுண்கலை மன்ற சார்பாக கலந்து கொண்ட மாணவ, மாணவியர்கள் **"BNEC FEST – 2019"** ஆம் ஆண்டிற்கான சுழற்கேடயத்தை பெருமையுடன் கைக் கொண்டனர். இக் கோப்பை நுண்கலை மன்றம் சார்பாக கல்லூரிக்கு பெருமை சேர்த்த இரண்டாவது சுழற்கோப்பையாகும். இதற்கு கல்லூரி நிர்வாகத்தின் பாராட்டையும் பெற்றது.

அன்னை பாத்திமா கல்லூரி மற்றும் ஈரோடு வேளாளர் கல்லூரியில் நடைபெற்ற கலை மற்றும் இலக்கியப் போட்டியில் நமது கல்லூரி நுண்கலை மன்றம் சார்பாக ஓவியப் போட்டிக்கான படைப்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தேனி மாவட்ட நேரு யுவ கேந்திராவின் சார்பில் பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் இளையோர் மன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும் மாவட்ட அளவிலான இளையோர் கலைவிழாவில் **(District Youth Festival)** 22.02.2019

அன்று நடைபெற்ற கிராமிய நடனத்தில் இரண்டாமிடத்தையும் கிராமிய பாடல் போட்டியில் மூன்றாமிடத்தையும் இக்குழுவென்று வாகை சூடியது.

**30.தேர்தல் கல்விக் குழு**

**நமது கல்லூரியில் தேர்தல் கல்விக்குழு போடி வட்டாட்சியர் செல்வி ஆர்த்தி அவர்களால் 08.10.2018ம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது.** மேலும் அவர் வாக்கின் முக்கியத்துவம் பற்றியும், வாக்காளர் அடையாள அட்டையின் தேவை பற்றியும் அவற்றின் பேரிடர் மேலாண்மை பற்றி எடுத்துரைத்தார்.

இக்குழு உறுப்பினர்களான மூன்றாமாண்டு வரலாற்றுத் துறை மாணவர் கோபி நாத் மற்றும் மூன்றாமாண்டு வணிகவியல் துறை சார்ந்த மாணவர் கார்த்திக் கண்ணன் ஆகிய இருவரும் போடி வட்டாச்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் 09.10.2018ம் நாள் கலந்து கொண்டனர்

வாக்காளர் விழிப்புணர்வை ஏற்படுத்த Poster Making மற்றும் கட்டுரை போட்டி 17.10.2018ஆம் நாள் நடத்தப்பட்டது.

23.10.2018ம் நாள் குழுவின் உறுப்பினர்களான கோபி நாளத் மற்றும் கார்த்திக் கண்ணன் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர்.

18.01.2019ம் நாள் தேனி மாவட்ட ஆட்சியரகத்தில் ஆட்சியர் தலைமையில் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு மைய மாநாட்டில் பேரா.இரா.கபேஷ் கல்லூரி தேர்தல் அதிகாரி கலந்து கொண்டார்.

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, நமது கல்லூரி வளாகத்தில் பல்வேறு விதமான போட்டிகள் பேரா.பால்பாண்டி, தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு) ஒருங்கிணைப்பாளர் வழியில் 23.01.2019 முதல் 25.01.2019 வரை நடைபெற்றது.

25.03.2019 அன்று தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நடத்திய போட்டிகளுக்கு **போடிநாயக்கனூர் தாசில்தார் செல்வி.ஆர்த்தி** மற்றும் நமது கல்லூரியின் முதல்வர் முனைவர்.T.இராஜகுமாரன் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் போடிநாயக்கனூர் வருவாய் அலுவலர் திரு.இராமன், கணிததுறை இணைப்பேராசிரியர் திரு.S.பூங்குன்றன், கணினிதுறை, துறைத்தலைவர் முனைவர்.S.சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனார். மேலும் இப்போட்டிகளை சிறப்பாக நடத்திய தேர்தல் கல்விக்குழுவின் தலைவர் **(Nodal officer)** திரு.இரா.கபேஷ் வரலாற்றுத்துறை பேராசிரியர் மற்றும் சுயநிதிப்பிரிவு தமிழத்துறை பேராசிரியர் திரு.ந.பால்பாண்டி அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. மாணவர்களின் வளாக தூதர் கோபிநாத் மூன்றாமாண்டு

வரலாற்று மாணவர் மற்றும் கார்த்திக்குமார் மூன்றாமாண்டு வணிகவியல் துறை மாணவருக்கும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

**31. முன்னாள் மாணவர் சங்கம் :**

ஏல விவசாயிகள் சங்க கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் மிக சிறப்பாக நடைபெற்று வருகிறது. இச்சங்கத்தின் 2018 – 2019 ஆம் கல்வியாண்டிற்கு உரிய நிர்வாக சார்ந்த கூட்டங்கள் 3 நடைபெற்று உள்ளது. இந்நிர்வாக கூட்டத்தில் முன்னாள் மாணவர்கள் சங்கம் கல்லூரிக்கு செய்த பல்வேறு உதவிகளை பற்றி விவாதிக்கப்பட்டது. மேலும் எதிர் வரும் காலங்களில் ஆற்றக் கூடிய செயல் திட்டங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது.

இச்சங்கத்தின் மற்றொரு மைல்கல்லாக கல்லூரி வளாகத்தில் அனைத்து **தறை மாணவர்களுக்கும் சுத்தமான குடிநீர் வழங்கும் நோக்கத்தில் ரூ.1,01,600/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஆயிரத்து அறநூறு) மதிப்பீட்டில் குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மாணவியர்கள்ஓய்வறை, வரலாற்றுத்துறை, கணிப்பொறியியல்துறை, கணிதவியல்துறை, இயற்பியல் ஆய்வகம், அலுவலகம், நிர்வாக மேலாண்மைத்துறை, விளையாட்டுத்துறை, தகவல்தொழில்நுட்பம் மற்றும் கணிப்பொறி பயன்பாட்டியல்துறை, வணிகவியல்துறை சுயநிதிப்பிரிவு, ஆங்கில மொழி ஆய்வுக்கூடம், நூலகம், தாவரவியல்துறை மொத்தம் 15 பொருத்தப்பட்டள்ளது.** இந்த சுத்திகரிப்பு இயந்திரத்தின் மூலம் சுமார் 2200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் நேரடியாக பயன்பெறுகின்றனர்.

**32. உடற்கல்வித் துறை**

நமது கல்லூரி மாணவர்கள் மதுரை காமராஜர் பல்கலைக்கழக அளவில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் பங்கு பெற்றனர். **இதில் R.வினோத்நவீன்ஜோசப் I M.A (English) இரண்டாமிடம், N.ஹரீஷ்குமார் I B.Sc (CS) ஐந்ாம் இடமிடம் பெற்றனர். இவர்கள் மணிப்பால் பல்கலைக்கழகம் , கர்நாடகாவில் "All India South Zone Inter-University" மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிக்கு சதுரங்க போட்டிக்கு விளையாடினார்.**

நமது கல்லூரி கபடி அணி 03.10.2018, 04.10.2018 அன்று திண்டுக்கல் G.T.N. கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிகளுக்கிடையேயான 'C' Zone கபடி போட்டியில் பங்கு பெற்றனர்.

நமது கல்லூரி பெண்கள் கபடி அணி 10.10.2018, 11.10.2018 அன்று சிவகாசி காளீஸ்வரி கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிகளுக்கிடையேயான Women Zone கபடி போட்டியில் பங்கு பெற்றனர்.

நமது கல்லூரி கால் பந்தாட்ட அணி 20.09.2018, 21.09.2018 அன்று கருமாத்தூர் Arul Anandar கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிகளுக்கிடையேயான ‘C’ Zone கால்பந்தட்டாப் போட்டியில் பங்கு பெற்றனர். இதில் விளையாட்டு வீரர் நதீஸ்குமார், இரண்டாமாண்டு ஆங்கில இலக்கியம், மற்றும் சி.மாரியப்பன், மூன்றாமாண்டு இயற்பியல் ஆகியோர் Inter Zone Selection க்கு தேர்வாகினார்

நமது கல்லூரி கிரிக்கெட் அணி 18.09.2018 முதல் 21.09.2018 வரை கருமாத்தூர் Arul Anandar கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிகளுக்கிடையேயான ‘C’ Zone கிரிக்கெட் போட்டியில் பங்கு பெற்று அரையிறுதி வரை தகுதி பெற்றனார். இதில் நமது கல்லூரி மாணவர் சிவசண்முகம், மூண்றாமாண்டு ஆங்கில இலக்கியம், மற்றும் சிவசக்திவேல் I M.A (English) ஆகியோர் Inter Zone Selection க்கு தேர்வாகினார்

நமது கல்லூரி பூப்பந்தாட்ட அணி 10.09.2018 அன்று திண்டுக்கல் GTN கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிகளுக்கிடையேயான ‘C’ Zone கிரிக்கெட் போட்டியில் பங்கு பெற்று அரையிறுதி வரை தகுதி பெற்றனார். இதில் நமது கல்லூரி மாணவர் கார்த்திக்ராஜா, மூண்றாமாண்டு ஆங்கில இலக்கியம், மற்றும் மதன்குமார் III B.A (English) ஆகியோர் Inter Zone Selection க்கு தேர்வாகினார்

நமது கல்லூரியில் 28.07.2018 அன்று நடைபெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக இறகுப்பந்தாட்டப் போட்டியில் இதில் R.அபிஷேக் III B.A (English) என்ற மாணவர் பங்கு பெற்று பல்கலைக்கழக அணிக்கு தேர்வாகினர்.

நமது கல்லூரி குத்துச் சண்டை விளையாட்டு மாணவர்கள் 20.10.2018, 21.10.2018 அன்று திண்டுக்கல் G.T.N.கல்லூரியில் நடைபெற்ற மதுரை காமராஜர் பல்கலைக்கழக அளவில் நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியில் பங்கு பெற்றனர்.

**33.கல்லூரி விளையாட்டு விழா :**

நமது கல்லூரியின் 45வது விளையாட்டு விழா நமது கல்லூரி மைதானத்தில் 23.03.2019 அன்று நடைபெற்றது. நமது கல்லூரியின் முதல்வர் முனைவர்.T.இராஜகுமாரன் அவர்கள் கொடி அசைத்து விழாவினை துவக்கி வைத்தார் நமது கல்லூரி நிர்வாகக்குழு உறுப்பினர் திரு.V.சொரூபன், திரு.S.நந்தகுமாரன், அவர்கள் ஒலிம்பிக் தீபம் ஏற்றினார். **போடி திரு.T.ஈஸ்வரன்,B.E, Deputy Superintendent of Police அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.** போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர்

நமது கல்லூரி தலைவர் அவர்கள் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டினார். விளையாட்டுத்துறை இயக்குநர் முனைவர்.கா.சிவா ஆண்டறிக்கையை வாசித்தார். இவ்விழாவில் நமது கல்லூரி நிர்வாகக் குழு உறுப்பினர்கள், பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பங்கு பெற்றனர்.

**34. பொது நூலகம்:**

நமது கல்லூரி நூலகத்தில் மொத்தம் **26728** நூல்கள் உள்ளன. இவ்வாண்டு நமது கல்லூரி நூலகத்திற்கு நிர்வாகம் சார்பாக 422 **புத்தகங்கள் ரூ.1,25,427/- மதிப்பில் வாங்கப்பட்டுள்ளன. மற்றும் ரூ.33800/-** மதிப்பிலான 12 ஜோர்னல்ஸ் புதியதாக சந்தா கட்டப்பட்டுள்ளது.

இவ்வாண்டு நமது கல்லூரி நூலகத்திற்கு நன்கொடையாக பல நன்கொடையாளர்கள், நமது கல்லூரி பேராசிரியர்க மற்றும் அலுவலகர்கள் புத்தகங்களை வழங்கியுள்ளார்கள். அவர்கள் முறையே நமது கல்லூரி செயலர் மற்றும் தொடர்பாளர் அவர்கள் ரூ.16426/- மதிப்பிலான 57 புத்தகங்களை வழங்கியுள்ளார். திரு. சத்தியமூர்த்தி அவர்கள் ரூ.11150/- மதிப்பிலான 39 புத்தகங்களை வழங்கியுள்ளார். திரு. வெங்கடகிரி அவர்கள் ரூ.9739/- மதிப்பிலான 41 புத்தகங்களை வழங்கியுள்ளார். திரு. காசிநாதன் அவர்கள் ரூ.3390/- மதிப்பிலான 6 புத்தகங்களை வழங்கியுள்ளார்.

முனைவர் C. இளங்கோ இணைப்பேராசிரியர் கணிதத் துறை ரூ.4,984/- மதிப்பிலான 24 புத்தகங்களை வழங்கியுள்ளார். செல்வி.V.மீனா, தமிழ்த் துறை உதவிப்பேராசிரியர் ரூ.315/-மதிப்பிலான 1 புத்தகத்தை வழங்கியுள்ளார். முனைவர். செல்வராஜ், முன்னாள் இணைப்பேராசிரியர், வணிகவியல்துறை ரூ.1,900/- மதிப்பிலான 9 வணிகவியல் புத்தகங்களை வழங்கியுள்ளார். முனைவர்.D. அழகர்சாமி, முன்னாள் துறைத்தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர், ஆங்கிலத்துறை அவர்கள் ரூ.1010/- மதிப்பிலான 4 புத்தகங்களை வழங்கியுள்ளார்.

திரு. சதீஸ்குமார், அலுவலக உதவியாளர் அவர்கள் ரூ.5815/- மதிப்பிலான 25 புத்தகங்களை வழங்கியுள்ளார். திரு.M.கார்த்திக், Typist அவர்கள் ரூ.6739/- மதிப்பிலான 59 புத்தகங்களை வழங்கியுள்ளார். MUTA ஆசிரியர் சங்கம் ரூ.5047/- மதிப்பிலான 54 புத்தகங்களை வழங்கியுள்ளது.

மாணவர்கள் கல்விவளர்ச்சிக்கு பெரிதும் உதவும் வகையில் (OPEN ACCESS SYSTEM) தாங்களே தெரிவு செய்துகொள்ளும் செயல்முறை

பின்பற்றப்படுகிறது. கணினி முறையில் புத்தகபரிமாற்றம் செய்யப்படுகிறது. தினசரி, வாரம், மாதம் ஒருமுறை, இருமுறை இதழ்களும் வாங்கப்படுகின்றன.

நூலகம் சார்பாக கருத்தரங்கம் 20-07-2018 அன்று நடைபெற்றது. நமது கல்லூரியின் முன்னாள் துறைத்தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர், ஆங்கிலத்துறை முனைவர் S. சுகுமாரன் அவர்கள் சிறப்புறை வழங்கினார். நூலக தினத்தை கொண்டாடும் வகையில் மாணவ மாணவியர்களுக்கு கவிதைப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி, வினாடிவினா போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன.

**35.வாசகர் வட்டம்**

நூலகம் மற்றும் வாசகர் வட்டம் சார்பாக கருத்தரங்கம் 20.07.2018 அன்று நடைபெற்றது. நமது கல்லூரியின் முன்னாள் துறைத்தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர், ஆங்கிலத்துறை முனைவர்.S.சுகுமாரன் அவர்கள் சிறப்பரை வழங்கினார். நூலக தினத்தை கொண்டாடும் வகையில் மாணவ, மாணவியர்களுக்கு கவிதைப்போட்டி கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி, வினாடிவினா போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு தற்போது பரிசுகள் வழங்கப்பட உள்ளன. மாணவ, மாணவியர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த வகையில் நூலகத்தை பயன்படுத்தியமைக்காக **Best Library User Award** வழங்கப்படுகிறது.

**36.தாத்தா பாட்டி குழு**

தாத்தா பாட்டி மாணவர் குழு சார்பாக **11.09.2018** அன்று மாணவ, மாணவியருக்கு தண்ணீர் பற்றிய விழிப்புணர்வு திரைப்படம் நமது கல்லூரியில் புதிய கருத்தரங்கு கட்டிடத்தில் காண்பிக்கப்பட்டது. இதன் ஒருங்கிணைப்பாளராக வேதியியல் துறைத்தலைவர் திரு.R.குமரராஜன் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.

**37. Internal Complaints Committee & Women Harassment and Prevention**

23.02.2019 அன்று ஒரு நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி **"Women Harrassment and Prevention"** ஆனால் நடத்தப்பட்டது. **இதில் நோட்டரி வக்கில் திருமதி.Prதி தேவி, B.Com., B.L மற்றும் மூத்த வக்கீல் திரு.A.C.சந்தானகிருஷ்ணன், M.A., B.L சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.** இந்நிகழ்ச்சி தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப்பட்டது கணினித்துறை இணைப்பேராசிரியர் திருமதி.K.நித்தியானந்தகுமாரி அவர்கள் வரவேற்புரை நல்கினார், முனைவர்.T.ராஜகுமாரன் அவர்கள் விழாவிற்கு தலைமை

தாங்கி தலைமையுரை நல்கினர். **சிறப்பு விருந்தினர் அவர்களுக்கு கணினித்துறை தலைவர் முனைவர்.S.சிவக்குமார் அவர்களால் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது**. பின்னர் சிறப்பு விருந்தினர் அவர்கள் எல்லா விதமான பெண்களுக்கு எதிரான விழிப்புணர்வு மற்றும் இந்திய சட்டங்கள் பற்றி சிறப்புரையாற்றினார். இறுதியாக நூலகர் திருமதி.G.மங்கை அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவு பெற்றது. இந்நிகழ்ச்சி கணினித்துறை இணைப்பேராசிரியர் திருமதி.K.நித்தியானந்தகுமாரி அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

**38. விடுதிகள் :-**

**அ.மகளிர் விடுதி :**

மகளிர் விடுதியில் தற்போது 46 வெளியூர் மாணவிகள் தங்கி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு 48 கட்டில்கள், ரேக்குகள், தொலைக்காட்சிப்பெட்டி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற வசதிகள் UGC நிதிமூலம் சிறப்பாகச் செய்து தரப்பட்டுள்ளது. மாணவிகளுக்கு தினந்தோறும் தமிழ், ஆங்கில நாளிதழ்களும், வேலைவாய்ப்பு மலர் வாரந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மாணவிகள் விளையாடுவதற்குத் தேவையான உபகரணங்கள் வாங்கித் தரப்பட்டுள்ளன. 2000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 தண்ணீர் டேங்குகள் பொருத்தப்பட்டுள்ளன. மாணவியர்களுக்கு இக்கல்வியாண்டில் பெற்றோருடன் பேசுவதற்கு ஏதுவாக Land line தொலைபேசி இணைப்பு ஏற்பர்டு செய்யப்படடு மாணவியர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

**ஆ.மாணவர் விடுதி :**

மாணவர் விடுதி தற்போது 74 வெளியூர் மாணவர்களைக் கொண்டு சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. நமது கல்லூரியின் தலைவர் திரு.S.V.சுப்பிரமணியன், உபதலைவர் திரு.P.V.கருப்பையா, செயலாளர் திரு.S.இராமநாதன் மற்றும் கல்லூரி நிர்வாகத்தினர் மாணவர்களுக்கு இக்கல்வியாண்டில் சுமார் **4 இலட்சம்** மதிப்பீட்டில் இரண்டு அடுக்குள்ள **40 கட்டில்கள்** மாணவர்களுக்கு வழங்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும் மாணவர்களுக்கு UPS வசதிகள் செய்யப்பட்டுள்ளது. அத்தியாவசியப் தேவைகள் உடனடியாக நிறைவேற்றப்படுகின்றன. தினந்தோறும் தமிழ், ஆங்கில நாளிதழ்களும் வாரந்தோறும் வேலை வாய்ப்பு மலரும் வழங்கப்பட்டு வருகிறது. தொலைக்காட்சி பெட்டி, விளையாட்டு உபகரணங்களும் தேவையான அளவுக்கு வாங்கித் தரப்பட்டுள்ளன.

## 39. போக்குவரத்துத்துறை :- (Transport Department)

நமது கல்லூாயில் **ரூ.40 லட்சம்** மதிப்பிலான 4 பேருந்துகள் வாங்கப்பட்டு 19.09.2012 முதல் மாணவியர்களுக்காக இயக்கப்பட்டு வருகிறது. மேலும் கடந்த ஆண்டு 2 பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. இதில் சுமார் 1091 மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர். இந்த பேருந்துகள் வாங்க நிதியளித்த ஏல விவசாயிகள் சங்கத்திற்கும் அதன் தலைவர் **உயர்திரு.S.V.சுப்ரமணியன்** அவர்களுக்கும் **செயலர் திரு.S.இராமநாதன், உபதலைவர் P.V.கருப்பையா** அவர்களுக்கும் மற்றும் **ஆட்சிக்குழு உறுப்பினர்கள்** அனைவருக்கும் இந்த நேரத்தில் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

## 40. கார்டோ – காம்ப் (Cardo – comp) :

மாணவ, மாணவியர்களின் தனித்திறமையை வளர்க்கும் பொருட்டு. நம் கல்லூரியின் முன்னாள் தலைவர் மரியாதைக்குரிய S.பாலுஅழகணன் அவர்களால் Cardo-comp ஏற்படுத்தப்பட்டு, இன்று வரை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மாணவர்களை Cardamom House, Tea House, Coffee House and Silk Cotton House என்று நான்கு குழுக்களாகப் பிரித்து அவர்கள் திறமைகளை வெளி கொணரும் பல வகையான போட்டிகள் நடத்தப்பட்டன. 28.03.2019 & 29.03.2019 ஆகிய இரு நாட்கள் இறுதிப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் **267** மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனார்.

தொடக்கவிழாவில் கல்லூரித் தலைவர். திரு.S.V.சுப்பிரமணியன் அவர்கள் தலைமை தாங்கவும், நிகழச்சிகளை கல்லூரி செயலர் திரு.S.ராமநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார். நிறைவு விழாவில் கல்லூரி தலைவர் திரு.S.V.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் சிறப்பு விருந்தினராக கவிதை நூல்கள், திரையிசைப் பாடல்கள் புகழ் கவிஞர் அறிவுமதி அவர்களின் சொற்பொழிவு நடைபெற்று விழா இனிதே முடிந்தது. இதன் அவைத்தலைவர்களாக K.நித்தியானந்தகுமாரி, A.சுபலெட்சுமி, Dr.G.மங்கை மற்றும் Dr.L.அலமேலு, ஆகியோர் உறுப்பினர்களாகச் சிறப்பாகச் செயல்பட்டனர். அதன் ஒருங்கிணைப்பாளராக பேரா.G.ராஜ்மோகள் அவர்கள் மிகச் சிறப்பாக செயல்பட்டு அனைத்து பாரட்டையும் பெற்றார்.

**41. பணிஓய்வு பெற்றோர் மற்றும் பணிஓய்வு பெற இருப்போர் :**

கணிதத்துறை துறைத்தலைவா, **திரு.R.பாண்டி, இணைப்பேராசிரியர்கள் திரு.C.இளங்கோ, திரு.A.அஜ்மீர்காஜா முகைதீன்** ஆகியோர் 31.05.2019லிருந்து ஓய்வு பெற உள்ளனர். **திரு.G.குப்புசாமி, பெருக்குபவர்** அவர்கள் 31.01.2019 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார்.

# நன்றியுரை:

**உலையில்லா வீட்டின் ஏழைச்சிறுவரும்**
**கலை பயில வாய்ப்பு தந்த**

எங்கள் தாய்ச் சங்கமாம் ஏல விவசாய சங்கத்தையும் கலைக்காக கல்லூரி தொடங்கி அதன் உயர்வுக்காக ஓயாமல் உழைத்து வரும் போடிநாயக்கனூர் ஏல விவசாயிகள் சங்கக் கல்லூரி தலைவர், துணைத்தலைவர், செயலர் மற்றும் தாளாளர், ஆட்சிக்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களின் கல்வி, கலை மற்றும் விளையாட்டுத் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுகள், சுழற்கோப்பைகள் மற்றும் நிதி உதவிகள் வழங்கிய நமது கல்லூரி ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு அறக்கட்டளைகளை நிறுவியுள்ள அருளாளர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் அழைப்பினை ஏற்று இவ்விழாவிற்க்கு வருகை புரிந்து பெருமை அளித்த **மதுரை காமராஜர் பல்கலைக்கழக தேர்வாணையர் டாக்டர்.O.ரவி, M.Sc., M.Phil., Ph.D., அவர்கள்** உள்ளிட்ட அனைத்து பெருமக்களுக்கும் என் இதயங்கனிந்த நன்றி. நம் கல்லூரியின் வளர்ச்சிக்கு பல்வேறு வகையிலும் நிதி உதவி வழங்கிய பல்கலைக் கழக மானியக் குழு (UGC) DST, New Delhi, CSIR, New Delhi DRDO New Delhi, TNSCST Chennai ஆகிய நிறுவனங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் கல்லூரியின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டு கல்லூரிக்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் உடனுக்குடன் நல்கி வரும் நமது பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர், கல்லூரி

வளர்ச்சிக்குழுகத் தலைவர் மற்றும் ஆட்சி மன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்லூரி வளர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாக இருக்கின்ற சென்னை கல்லூரிக் கல்வி இயக்குனர் மற்றும் மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குனர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நம் கல்லூரி சிறப்புடன் செயல்பட அயராது உழைத்து வரும் ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள், ஊடக அன்பர்களுக்கும் மற்றும் கல்லூரி நலன் பேணும் பெரியோர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இவ்வறிக்கையை நிறைவு செய்கிறேன்.

நன்றி !வணக்கம் !

**Dr.T. ராஜகுமாரன்**

**முதல்வர்**

**போடிநாயக்கனூர்**

**26.03.2019**